திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9 30—12—55 : வெள்ளி : விலை 3 அணு மலர் : 20

'பஞ்சசீல வீரரின் புதிய சர்க்கஸ்!'

ஆட்டமோ பகாமாட்டம்! கூப்பாடோ சகிக்க முடியாதது!

ஆசியாவின் ஜோதி நேரு பண்டிதர், கடந்த எட்டு ஆண்டுகளாக அரசியல் உலகில் புரிந்துவரும் விசித்திரங்களுக்கு அளவேயில்லை! அவரும் அவரது சகாக்களும் தங்களிடம் இன்று சிக்கியுள்ள ஆதிக்கம், எவ்வகையிலும் தங்கள் பிடிப்பிலிருந்து விடுபடக்கூடாது என்ற எண்ணத்தினுல் பிறரது உரிமை, வாழ்வு, தன்மானம், ஆகிய எதையுமே பொருட்படுத்தாமல் தர்பார் நடத்தி வருகின்றனர்.

நேரு சர்க்காரின் அநீதிகளை நன்கு அறிந்தோரும், ஏதோ தங்களுக்கென்று சில பட்டம், பதவிகள் கிடைக்குமானுல் போதுமென்ற ஆசையில் சிக்கி, நேரு பண்டிதருக்குத் துதிபாடி வருகின்றனர்.

இவ்விதம் துதி பாடித்திரிபவர்களின் அறிவாற்றலை எண்ணிப் பார்ப்போமேயானுல், நேரு பண்டிதராலும் மற்றும் வடநாட்டுத் தலைவர்கள் எவராயினும், அவர்கள் இரண்டாந்தரம், மூன்ருந்தர ஆட்களாகவே கருதப்படுவர். எனினும் தங்களின் தன்மானத்தை மறந்து நேரு பஜனை பாடித்திரிகின்றனர் அந்தத் திருமேனிகள்!

எனவேதான் — நேரு சர்க்காரும் தட்டிக் கேட்க ஆளில்லாவிடில் தம்பி சண்டப் பிரசண்டன் என்ற கதைபோல நாளுக்கொரு கோமாளிப் பேச்சு பேசிக்கொண்டு இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மக்களின் ஒன்றுபட்ட தன்மைக்குக் கேடு விளைவித்து வருகின்றனர்.

நேரு பண்டிதரின் வெளிநாட்டுக் கொள்கையை எடுத்துக்கொண்டால், வல்லரசுகள் நடத்திவரும் சமாதான நாடகத்திற்கு கோமாளி வேஷம் தாங்கியதைப் போல காட்சியளித்துவருகிறது. கோவா காஷ்மீர், இலங்கை பிரச்னைகளில் நேரு சர்க்காரின் அரசியல் சூன்யம் எவ்வளவு என்பதை உலகமே அறிந்ததாகும்

வெளிநாட்டுக் கொள்கையில் தான் இந்த லட்சணம் என்ருல், உள்நாட்டு விவகாரங்களிலும் மகா மட்டமாகக் காட்சியளித்து வருகிறது நேரு சர்க்கார்!

இவ்விதம் நாம் கூறுவதால் நேரு சர்க்காருக்கு அறிவாற்றல் இல்லை என்று நாம் முடிவுகட்டிவிட்டதாக எவரும் கருதிவிடக்கூடாது. நேரு பண்டிதருக்கு ஆற்றல் இருக்கத்தான் செய்கிறது. ஆனுல் அந்த ஆற்றல் அனைத்தும் தமது அரசியல் ஆதிக்கம் நிலைத்திருக்கவேண்டும் என்பதற்காகவே பயன்படுத்துகிருரே யல்லாது மற்றவர்களின் வாழ்வைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

இந்தியத் துணைக்கண்டம் வெள்ளையர் பிடிப்பிலிருந்து விடுபட எல்லா மாநிலங்களுமே மகத்தான தியாகம் புரிந்திருக்கின்றன. அத்தியாகத்தின் மூலம் கிடைத்த உரிமையை எல்லா மாநிலங்களுக்கும் சரிநிகர் சமானமாகக் கிடைக்கும்படி செய்வதற்கு பதிலாக கிடைத்த அதிகாரத்தை வட நாட்டிலுள்ள ஒருசிலர் தங்களின் பிடிப்பில் இறுகப் பிடித்துக் கொண்டும், 'ஏக இந்தியா'வின் ஒற்றுமை சிறிதும் பழுது படாமலிருக்கவே நாங்கள் இவ்வளவு பந்தோபஸ்தாக யிருக்கிருேம். என்ற உலுத்துப்போன

நக்கீரன்

பேச்சினைப் பேசிக்கொண்டும் பிற மாநிலங்களின் வாழ்வை சீர்குலைத்து வருகின்றனர்.

நேரு சர்க்காரின் இந்த அநீதிகளை எதிர்த்துக்கேட்பவர்களின் உணர்ச்சியை வெவ்வேறு வழிகளில் திருப்ப எண்ணி கடந்த எட்டு ஆண்டு காலமாய்—குறிப்பாக நாலைந்து ஆண்டுகளாய் நேரு பண்டிதர் தமக்குத்தெரிந்த சாமர்த்திய மனைத்தையும் காட்டி வருகிருர்!

அப்படி காட்டப்படும் சாமர்த்திய மாகிலும் புத்தம் புதியதா என்ருல் அதுதானில்லை. பிரிட்டிஷ் ஆட்சியினர் பல முறை பயன்படுத்திப் பழுதடைந்த ஆயுதத்தை நேரு சர்க்கார் பிரயோகிக்கிறது!

இந்தியத் துணைக்கண்டத்தின் விடுதலைப் போராட்ட உணர்ச்சியைச் சிதறடிக்கும் வகையில் அன்று வெள்ளையர் கையாண்ட முறை யாதெனில் தொட்டதற்கெல்லாம் கமிஷன் நிறுவி, விசாரணை செய்வதும் அதன்பேரால் பல ஆண்டுகளைக் கடத்துவதும், விசாரணைக் குப்பிறகும் பலகாரணங்களைக்கூறி வேறு ஒரு திட்டத்தைத் தெரிவிப்பதும், மீண்டும் அதற்காக அபிப்ராயம் திரட்டுகிறேமென்ற பேரால் நாட்டிலே கருத்து வேறுபாட்டை வளர்ப்பதுமாக காலங்கடத்தி வந்ததைப்போலவே, இன்று நேரு சர்க்காரும் இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு உரிமை வழங்கும் பிரச்னையில் தங்களின் கைவரிசையைக் காட்டி வருகின்றனா!

வெள்ளையர்களாகிலும், அந்நியர், ஏகாதிபத்ய வெறி கொண்டோர் சுரண்டல் மனப்பான்மையினர் என்ற—குற்றச் சாட்டுக்கு ஆளானவர்கள்! ஆனுல் நேரு பண்டிதரும் அவரது குழாமும் பாரத மாதாவின் தலை புதல்வர்கள் — இந்திய மாநிலங்களிலுள்ள மக்களின் இன—கலாசசார வேறுபாடுகளை நன்கு உணர்ந்தவர்கள்! எனினும் வெள்ளையர் கையாண்ட தந்திரத்தையே நேரு பண்டிதரும் பின்பற்றுகிருரென்ருல், இந்த நடவடிக்கைகளுக்கு என்ன பெயரிட்டு அழைப்பது என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டு விடுகிருேம்.

நிர்க—மாநில புனர் அமைப்புக்குழுவின் அறிக்கை வெளிவந்ததிலிருந்து இந்தியத் துணைகண்டத்தின் பல பாகங்களிலும், குறிப்பாக, தென்னுட்டிலும் அந்தந்த மாநில சர்க்காருக்கிடையேயும்! மக்களுக்கிடையேயும் வளர்ந்துவரும் வேறுபாடுகள், குழப்பங்கள் இதுவரை வேறுஎந்தசந்தர்ப்பத்

6—ம் பக்கம் பார்க்க

நேரு பண்டிதரின் நவீன சாகசம்!

வடநாட்டையும், தென்னுட்டையும் ஒன்றுபடுத்தும் வித்தை! —சவி.

சுவைக்க வாரீர்!

★ திராவிடன் பொங்கல் மலர் ★

திராவிடர் திருநாளன்று நாம் அளிக்கும் கருத்து விருந்துக்கு இதுவரை தயாராகியுள்ள பட்டியலைக் காணீர்.

அல்பேனியா நாட்டழகி

வைர மோதிரம்

வேண்டாமடா இந்த விபரீதம்

நிலவு—சோமரசம், அழகிகள்

சோழன் கலிங்க நாட்டு வெற்றி.

அவசரக்காரன்!

என் தலைவன்

இதுவே நம்வேலை

விடுதலை

ஆடி ஆடி விழுநாளும்
அண்டி அண்டி வருகுதடா

நமது சிற்றரசு

- அறிஞர் அண்ணா அவர்கள் தீட்டும் அரசியல் கட்டுரை
- பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், மற்றும் திராவிடத்தின் சிறந்த எழுத்தாளர்களின் எண்ணக் குவியல்.
- என். வி. என். எழுதும் நான் கண்ட கலைக் கோயில்.
- ஓவிய நிபுணர் பாலு சகோதரர்களின் முகப்புச் சித்திரம்.
- படங்கள், கார்ட்டூன் சித்திரங்கள், மற்றும் சிறந்த பல அம்சங்கள்.

திராவிடர் திருநாளன்று (14—1—56) எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

நூறு பக்கங்கள் : விலை ரூபாய் ஒன்று

தோழர்களே, உள்ளூர் திராவிடன் விற்பனையாளரிடம் மலருக்காக ரூபாய் ஒன்று உடனே செலுத்திப் பதிவு செய்து கொள்ளவும். —நிர்வாகி—திராவிடன்



புயற் கொடுமையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் நேரிற் சென்று பார்வை யிட்டார்.

ஐயா ஒரு சேதி கேளும்!

"அணு"

டார்வின் பரம்பரை !

டார்வின் பரம்பரை என்றதும் குரங்குகள்தான் ஞாபகத்திற்கு வரும். அதைச் சற்று ஒதுக்குங்கள்.

நமது இந்தியத் துணைகண்டத்தின் உதவி ஜனாதிபதியாக வீற்றிருக்கும் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் டார்வின், வால்டேர், கார்லைல் என்கின்ற அறிஞர்களின் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவராய் உயர்ந்து விட்டிருக்கிறார். எப்படி?

ஃபிரெடரிக் திக்ரேட் என்பார் அதிமேதாவிகளைப்போற்றுவான் வேண்டி 1740-ல் ஒரு சிறப்புப் பட்டத்தைக் கண்டு எடுத்தார். அதுவே "ஆர்டர் ஆஃப் பார் லே மெரிட"—Order of Pour Le Merit என்பது அது ஜெர்மனி தேயத்துச்சிறப்புப்பட்டம். அப்பட்டத்தை ஏற்ற ஆதி அறிஞர்களே வால்டேர், டார்வின், கார்லைல் என்பார்கள்.

அத்தகு சிறப்புப் பட்டத்தை நமது இராதா கிருஷ்ணனுக்கும் ஜெர்மனி அரசாங்கம் வழங்கிப் பெருமை யளித்திருக்கிறது. அப்பட்டத்தை விளக்கும் பதக்கம் அவர் மார்பில், இம்மாதம் இருபதாம் நாள், ஜெர்மன் தேயத்துத் தூதுவர் டாக்டர். மேயெர் என்பாரால் அணிவிக்கப்பட்டது.

அதே பட்டத்தை இவ்வாண்டில் பெற்றுச் சிறப்புற்றவர்கள் ஆல்பெர்ட் சுவிட்சரும், நெயில் போஹறும் ஆவார்கள்.

இப்படி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் உயர்ந்தது குறிப்பாகத் தென்னாட்டிற்கும், சிறப்பாக ஆந்திராவிற்கும் பெருமை தானே!

O

ஆண்டைகோபம் ஆட்டினிடமா!

மடகாஸ்கர் என்பது ஆஃபிரிக்காவைச் சார்ந்த ஒரு தீவு. அது ஃபிரஞ்சு ஆதிக்கத்தின் கீழ் உள்ளது.

அங்கே பலப்பல இந்திய குடிகள் பரம்பரையாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களெல்லாம் இன்று பெருந் துன்பங்களுக்கு ஆளாக்கப் படுகிறார்களென்று செய்தி தலைகாட்டுகிறது.

ஃபிரஞ்சு அரசாங்கத்தால் இந்தியர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களை, முளையிலேயே கிள்ளி எறிய வேண்டியது நமது இந்திய அரசாங்கத்தின் தலையாய கடனாக இருக்கவேண்டுமென்பது நமது அவா. வளரவிட்டு வேடிக்கைப் பார்த்து. இன்று இலங்கை விஷயத்தில் ஏங்குவதைப் போன்றிருப்பது கூடாது. ஆவன உடன் செய்தே தீரவேண்டும்.

இன்னல்களுக்கு மூலகாரணம் என்ன? நமது பாண்டிச்சேரியில் ஓட்டிக்கொண்டிருந்த பிரஞ்சு ஆதிக்கம் வெட்டப்பட்டதல்லவா? (அங்கே இன்று நமது புரட்சிக்கவிஞர்பாரதிதாசன் அவர்கள் ஆட்சிமன்ற உறுப்பினராக வீற்றிருப்பது நினைவு கூறத்தக்கது) பிரஞ்சுக்கொடி புதுவையினின்று பிய்த்து எறியப்பட்டதின் கடுப்பே, மடகாஸ்கா வாழ் இந்தியக் குடிகள் மீது சினங்கொள்ளச் செய்கிறது.

ஆண்டை கோபத்தை ஆட்டின் மேல் காட்டிப் பயன் என்ன?

மடகாஸ்கரில் உள்ள இந்தியர்களை துன்புறுத்தி வெளியேற்றும் படலத்தைக் கையாண்டுள்ளனராம் பிரஞ்சு ஆட்சியாளர்கள்.

மடகாஸ்கர் சென்ற இந்தியக் குடிகள் அங்குள்ள ஆட்சியைக் கைப்பற்றவா சென்றார்கள்? புதுவையில் பிரஞ்சுக்காரர்கள் கொடி கட்டி ஆளத்தான் வந்தார்கள். ஆண்டார்கள், சென்றார்கள். ஆனால் இந்திய குடிகள் கூலிகளாய், மடகாஸ்கரில் குடியேறி. விலா வெலும்பு தெறிக்க பாடுபட்டு காடு திருத்தி நாடாக்கி, நகராக்கி, அங்குள்ளோரை மாடமாளிகைகளில் வாழவைத்து, கால் வயிற்றுக் கஞ்சிக்கும் வகையின்றி தத்தளிக்கிறார்கள். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாத ஓர் நிலையில் இருக்கிறார்கள். வேறெங்காவது ஓடிப்போய் வாழ வகையற்றவர்களாகவும் தவிக்கிறார்கள்.

அந்தோ தமிழ்நாடே! வந்த சுரண்டல்காரர்களுக் கெல்லாம் கைலாகுதந்து, சொந்த மைந்தர்களை துறத்தித் தவிக்க விட்டுவிட்டாயே! எப்போதுதான் உமது மைந்தர்களை மீட்டு அணைத்து மகிழ்விக்கப் போகிறாயோ? இன்னுமா உறக்கம்? விழித்தெழு! உமது செல்வங்களை ஏற்று, செல்தரிக்கும் ஊதாரிகளை வெளியேற்றி, உமது இருப்பிடத்தை வளமாக்கு! அதனை இன்றே செய்! நாளை யென்றிருக்க வேண்டாம்!

மடகாஸ்கரே! உம்மைச் சுரண்டாது ஆனால் கொழுக்கவைக்கும் இந்தியரை விரட்டாதே! கொழுத்த யானையைப்போல் தலையில் மண்ணை வாரிப்போட்டுக் கொள்ளாதே! பழி ஓரிடம் பாவம் வேறிடமா? திருந்து சீர்பெறு!

O

கானடாவைப் பார் !

கானடாவிலும் இந்தியர்கள் குடியேறி, அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார்கள். அவர்களை, முரட்டுப் பிடிவாதம் ஏதுங்காட்டாமல். கானடா வாசிகளாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறது கானடா அரசாங்கம், மகிழ்ச்சியடைகிறோம்! வாழ்த்துகிறோம்!

மூவாயிர இந்திய மக்கள் கானடா வாசிகளாக அங்கீகாரம் பெற்றதோடு, ஓட்டுரிமையும் பெற்று உரிமையோடு வாழ்கிறார்கள்.

இலங்கையே கானடாவிடம் பாடங்கேள்! மடகாஸ்கரே கானடாவை நீயும் திரும்பிப்பார்!

O

தமிழ்ப்புத்தகங்கள்அன்பளிப்பு!

மலேயா பல்கலைக் கழகத்திற்கு சென்னை அரசாங்கம் 5,245 தமிழ்ப் புத்தகங்களை அன்பளிப்பாக அளித்துள்ளதாம்.

மலேயா பல்கலைக் கழக நூல் நிலையத்தில் தமிழ்ப் பகுதியை தோற்றுவித்ததின் விளைவாகவே அவ்வன்பளிப்பு நிகழ்ந்தது.

மொழிகளிலே தமிழைப்போல் இனிதாவது எங்கும் காணோம் என்றார் பாரதியார். அத்தகு இன்பத்தமிழ் புகாத இடமிருக்கக் கூடுமா? மலேயாவிற்குக் கிடைத்த தமிழ்ப் புத்தகங்களை அங்குள்ளார் படித்து இன்புறுவார்களாக—நிற்க.

அன்பளிப்பாக வழங்கிய 5,245 புத்தகங்களின் பட்டியல் நமக்குக் கிடைக்கவில்லை. ஒரு வேளை எல்லாம், இராமாயணமாகவும், மகா பாரதமாகவும், கீதையாகவும், ஸ்தல புராணங்களாகவும், மற்ற மற்ற புராணங்களாகவுமே இருந்துவிட்டால் யாது பயன் என்ற ஏக்கம் பகுத்தறிவாளர்களுக்கு இல்லாமற் போகாது.

பெரியார் ஈ. வெ ரா, அறிஞர் அண்ணா புரட்சிக்கவி பாரதி தாசன், மா. சிங்காரவேலர் கைவல்யம் முதலியோர் எழுதிய நூல்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கக்கூடுமா? அங்ஙனம் இருந்தால் எவ்வளவு பயன் உண்டு! அறிவு விளக்கத் திறவுகோல் இவர்கள் எழுத்தில்தானே இருக்கிறது!

மலேயாவாழ் தமிழபிமானிகளாவது பட்டியலைக் கண்டு நமக்கு அறிவித்தல் நலம். அதற்குள் சென்னை அரசாங்கமே அறிவித்தால் மேலும் நலம். பொறுப்போம்!

இலங்கை தி. மு. க.

திராவிட முன்னேற்றக் கழகம் பொரளைக் கிளையின் அவசரச் செயற்குழு கூட்டம் 11—12—55 ஞாயிற்றுக்கிழமை 4-மணிககு கழகப்பணி மனையில் துணைச்செயலாளர் தோழர். அ. காயம்பு அவர்கள்தலைமையில் நடைபெற்றது. அதுபோது, இ. தி. மு. க. பொரளைக் கிளையின் சார்பில் நடக்கவிருந்த கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழா எதிர்பாராது, தமிழகத்திலும் ஈழத்திலும் புயலாலும் மழையாலும் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகின்ற மக்களுக்கு ஆண்டுவிழா நிதியை நிவாரண உதவியாக அளிக்கும் பொருட்டு ஆண்டுவிழா தற்காலிகமாக ஒத்தி போடப்பட்டதுடன் புயலாலும் மழையாலும் பாதிக்கப்பட்டு இன்னலுறும் ஈழத்தவருக்கும் தமிழகத்தவருக்கும் தன் ஆழ்ந்த அனுதாபத்தை இ. தி. மு. க. பொரளைக் கிளை தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது.

குறளின் பெருமை

இசை அன்பன்

அன்பை வளர்க்கும் குறள்
அறிவைப் பெருக்கும் குறள்
இன்பத் திருக்குறளை—அன்பா
ஏனோ நீ மறந்து விட்டாய்.

இரண்டடி என்றே எண்ணி
ஏசி நீ பேசிடாதே
மருண்டிடுவாய் சொன்னேன்—அன்பா
மகிமையைத் தெரிந்த பின்னால்

தாசினி எங்கும் இதன்
கருத்தினைப் போற்றிடுதே
மாசிலா ஏடிதனை—அன்பா
மனத்தினில் நீ வளர்ப்பாய்

இன்பமே பொங்கிடுமே
இல்லத்தில் என்றுமே
நன்மை பல அடைவாய்—அன்பா
நாளும் நீ உயர்ந்திடுவாய்

வள்ளுவர் வகுத்த வேதம்
சொல்வளம் மிகுந்த வேதம்
தெள்ளு தமிழ் வேதத்தை—அன்பா
தள்ளாமல் தினம் படிப்பாய்!

திராவிடப் பூங்கா

அழுகை வருமே!

எப்பொழுது நோக்கினும், புத்தகமும் கையுமாகவே காட்சி தந்து, ஒரு கண நேரத்தையும் வீண் போக்காது, "கற்றது கை மண் அளவு..." அதிலும் கற்றது எம்மண் அளவு என்ற ஏக்கம் பூண்டு, கற்பதிலே தொழிலாக உள்ளவர்கள் சில பலர், அச் சில பலருள், எளியோனும் ஒருவன் என அடக்கத்துடன் கூறிக்கொள்ள அனுமதி கோருகிறேன்.

அப்படிப் படிக்கும் நூல்கள் பலப் பல; பார்க்கும் செய்திகள் நாட்கள்தொறும் பல. அப்படிப்படிக்கும்போது, தேர்ந்த ஆசிரியர்களால் எழுதப்பட்டச் சிறந்த நூல்களிற் காணுஞ் சுவையுள்ள பாகங்களைப் பருகும்போது, பன்முறை மனம் உருகி, கண்ணீர் வடித்துக் கொண்டே இருப்பது ஏனோ எனது சுபாவமாக அமைந்து விட்டது!

இதைக் குறித்து நான் வெட்கப்படுவதும் உண்டு அதைவிடப்பெருமை கொள்வதும் உண்டு. அவையெல்லாவற்றையும்விட குன்றிய மனவலிமையுடையேன்; என் செய்வேன்?—என ஏங்குதலே அதிகம்.

ஒரு முறை எனது உள்ளப்போக்கை நன்குணர்ந்து பழகும் நண்பரொருவரிடத்தில், 'யான' படிக்கும்போது சிற்சில இடங்களில், மெய்சிலிர்ப்பும்; மயிர்க் கூச்சமும் அடையப்பெற்று; அழுதும் விடுகிறேன். அது எதனாலிருக்கும்? உடல்தளர்ச்சிக் காரணமாக இருக்குமா? அதனால் உடல் நலங்குன்றி விடுமா!" எனக் கேட்பதுண்டு.

அதற்கு அவர், 'தாங்கள் இலயித்துப் படிக்கிறீர்கள். உங்கள் உள்ளத்தை, எழுதியவர் கையில் ஒப்படைத்து விடுகிறீர். அவர் எழுத்தில் கவர்ச்சி கொண்டு, உணர்ச்சிப் பெருக்குற்றுருகுவீர்போல் தோற்றுகிறது. அதனாறிந்த மட்டில் நல்ல அறிகுறிதான். உடலுக்கு ஊனமிராது. படிப்பது மனதில் தங்குவதற்கு அது ஒரு நல்ல வழி அதனால் அஞ்சலது வேண்டாம்"—எனக் கூறுவார்.

மேலே கூறிய நண்பரை விட்டால் வேறு ஓரே ஒருவர்தான் எனதுள்ளத்தை நன்கு அறிந்தவர். அவரிடமும் இந்த எனது போக்கைச் சொல்வதுண்டு.

அதற்கு அவர், 'நீர் அழுத்தமான மனம் கொண்டவர் என்றுதான் உம்மைப்பற்றி நினைப்பதுண்டு. ஆனால் எளிதில் உணர்ச்சி வயப்பட்டு விடுபவராயும் உள்ளீர். உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி, இனிமையையோ, நயத்தையோ, வருத்தத்தையோ, மகிழ்ச்சியையோ தரும் சொற்களையும், பக்குவமாகப் பருகிப் பழகிக்கொள்ள வேண்டும். மனவலிமையைப் பெருக்கிக் கொள்வது நன்று'—என மொழிந்திடுவார்.

இந்த விஷயத்தில் ஒன்றும் விளங்காதவனாய், சுபாவப்படியே சென்று கொண்டிருக்கிறேன். நல்லதோ, தீதோ எனத் திகைப்புற்ற இந்த நேரத்தில், டாக்டர் உ. வே. சாமிநாதய்யரால் எழுதப்பட்ட 'வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம்' படிக்கும்வாய்ப்பு கிட்டியது.

அவர் சரித்திரத்தைக் கண்ணுறுங்காலும் சிற்சில இடங்களில் கண்ணீர் வீழ்த்தி அழுதேவிட்டேன். உரத்த குரலில் படிப்பதும் தடைப்பட்டு புத்தகத்தையே சிறிது நேரம் மூடி வைத்து விட்டுப் பிறகு எடுத்துப் படித்துப் படித்து முடித்தேன்.

அப்புத்தகத்திலேயே இந்த அழும் தன்மைக்கு மேற்கோள் கிடைத்தது. அதைக்கண்டுதான் ஆறுதலுற்றேன்.

வித்துவான் மீனாட்சி சுந்தரனாருக்கே உருகி அழும் மனம் இருந்தது. இதனால் அவரது உடல் நலம் குன்றியதாகக் காணப்படவில்லை. அதனால் அவருடைய புலமை அகன்றும், அறிவரிதாயும் விளங்கியே நின்றது. 1815-ல் பிறந்த அவர் 61-வருடங்கள் வாழ்ந்து தமிழ்க் கடலைக் கடைந்து அமிழ்தத்தைக் கண்டெடுத்து, அனைவருக்கும் பகிர்ந்தளித்து 1876-ல் புகழுடம்பை நிலை நிறுத்தி பூத உடலை மறைத்துக் கொண்டார்.

எனவே நமக்கும் அழுகைவரும் தன்மையால், புலமை அகன்று துலங்காதொழியினும், அறிவு அரிதாக விளங்காதொழியினும், உடல் நலங்குன்றி மடிந்தொழியமாட்டோம் என்ற தைரியத்தை ஊட்டுவித்தது. அந்தப்பகுதியைக்கீழே காண்போம்:—

'மீனாட்சி சுந்தரனாரைப் பார்த்தற்காக ஒரு நாள் அயலூரிலிருந்து முக்கிய நண்பராகிய ஒரு வேளாளப் பிரபு வந்தார் அவர் இவரைக் கண்டு பாராட்டி விட்டு உண்ட பின்பு சிதம்பர பிள்ளை வீட்டின் மேல் மாடத்தில் ஒரு பக்கத்தில் சயனித்துக் கொண்டார்; சொல்ல வேண்டிய பாடங்கள் முடிந்தவுடன் மாணாக்கர்களை அனுப்பிவிட்டு வேறு ஒரு புறத்திலே இவர் துயின்றார்.

வந்தைவேள்

துயின்றவர் வழக்கம் போலவே பதினைந்து நாழிகைக்கு மேல் விழித்துக் கொண்டு காஞ்சிப் புராணத்தின் இரண்டாங் காண்டத்துள்ள ஒரு பகுதியைப் படித்து அதன் பாலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை இன்புற்றுக் கவிஞர் பெருமானாகிய கச்சியப்ப முனிவரது அருமை பெருமைகளை நினைந்து மனமுருகிக் கண்ணீர் வீழ்த்தியும் ஆடையால் கண்களைத் துடைத்தும் படித்துக் கொண்டே இருந்தனர். இப்படியிருக்கையில் அங்கே அயலிடத்தே துயின்ற புதிய பிரபு விழித்தெழுந்து ஜன்னல் வழியாக வெளிச்சந் தெரிந்தமையால் இவரைப்பார்த்தனர்; இவர் அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொள்ளுதலையும் படிப்பதையும் கவனித்தார். சிறந்த நூல்களிற் சுவையுள்ள பாகங்களைப் படிக்கும் பொழுது கல்விமான்களுக்கு அடிக்கடி மனம் உருகுமென்பதும் கண்ணீர் பெருகுமென்பதும் அவர் அறியாதவர்; ஆகலால், "ஏதோ இவர் அழுகிறார்" என்று எண்ணிக் கொண்டார், திடீரென்று எழுந்து பரபரப்புடன் வந்து இவர் கையிலிருந்த புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கீழே எறிந்து விட்டு இவரை நோக்கி, "ஐயா நீங்கள் வாசித்தது போதும்; நிறுத்துங்கள்"

இந்த அகாலத்தில் நீங்கள் தூங்காமல் வருந்தி அழுவதற்குக் காரணம் என்ன! ஏதேனும் குடும்பக் கவலை உண்டோ! உங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் குறிப்பறிந்து செய்வதற்குச் சிதம்பரம் பிள்ளை முதலியவர்கள் இருக்கும் பொழுது எதற்காக இப்படி வருத்த மடையவேண்டும்? மனத்திலிருக்கும் வருத்தத்தை வெளியிடாமற் புத்தகம் வாசிப்பதாகப் பாவனை செய்துகொண்டு ஏன் இப்படி அழுது கொண்டிருக்கிறீர்கள்! உங்கள் மனத்தில் உள்ளதைச் சொல்லுங்கள். ஏதாயிருந்தாலும் நான் முடித்து விடுகிறேன், நீங்கள் வருத்தப்படுவது என்னுடைய மனத்தை வருத்துகின்றது' என்றார். இவர் அவருடைய பேச்சைக் கேட்டு நகைத்தனர், அவர், இந்தமாதிரி சிரித்து விட்டால் நான் ஏமாந்து போவேனென்று நினைக்க வேண்டாம்: என்னதான் சிரித்தாலும் உங்கள் வருத்தம் எங்கே போகும்! உண்மையாகக் கேட்கிறேன்; உங்கள் மன வருத்தம் இன்னதென்று சொல்ல வேண்டும்' என்றார்.

பிள்ளையவர்கள்: 'ஒன்றும் இல்லை; ஐயா! இந்நூலை நான் படித்துவரும்போது ஒரு பாகம் என் மனத்தை உருக்கி விட்டது அதனால் என்னையறியாமல் கண்ணீர் வந்தது.'

அவர்: 'புத்தகத்தை வாசித்தால் அழுகை வருமோ! அழுகை நீங்கி விடுமே! எனக்காகச் சொல்லவேண்டாம், உள்ளதைச் சொல்லுங்கள்' என்று மிகவும் வற்புறுத்திப் பின்னும் வேண்டினார். அவரைச் சமாதானப்படுத்தித் தமக்கு வருத்தமில்லையென்பதைத் தெரிவித்தற்கு இவர் பெரும் பிரயத்தனம் செய்தார். ஆனாலும் அவருக்கு இவருடைய வார்த்தைகளில் முழு நம்பிக்கை உண்டாகவில்லை மறுநாட் காலையில் அவரே சிதம்பரம்பிள்ளை நடத்தும் அந்த வர்க்க ஏனையோரிடத் தம் முதல்நாள் இரவில் நடந்தவற்றைச் சொல்லி. 'பிள்ளையவர்களை நன்றாகக் கவனித்துக் கொள்ளவேண்டும்' என்று கூறி விட்டுச் சென்றனர். எல்லோரும் அதனைக் கேட்டு, 'இப்படியும் ஒரு மனிதருண்டா!' என்று வியப்பு முற்றுத் தம்முள் அடிக்கடி சொல்லிக் கொண்டு மகிழ்வாராயினர். பிள்ளையவர்களைக்கண்டு அவர்கள் கேட்டபொழுது அவருக்குத் தம்பாலுள்ள அன்பே அச்செயலுக்குக் காரணமென்று விடை பகர்ந்தார்.

பிறகு அதே நூலில் மற்றொரு மேற்கோளையும் கண்டு ஆறுதலுற்றேன்.

அது, மீனாட்சி சுந்தரனார் புதிய செய்யுட்களைச் சொல்ல, தியாகராச செட்டியார் எழுதுவது வழக்கமாம், அங்ஙனம் எழுதும் பொழுது செய்யுட்களின் சொல்லின்பம், பொருளின்பங்களையறிந்து மனமுருகிக் கண்ணீர் வீழ்த்துவாராம்.

ஆக: ஊன்றிப்படித்து, கருத்தில் கலக்கும் பாகங்களால்' அழுகை வருவதும் இயற்கை என்பது தெளிவாகிறதன்றோ!

○

பம்பாய் தி. மு. கழக அறிக்கை

●

தலைமை நிலையத்திலிருந்து வரப்பெற்ற உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாட்களை, பம்பாயிலுள்ள கிளைகளனைத்திற்கும் அனுப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆமதாபாத்திலுள்ள கிளை கழகத் தோழர்கள், நகரக் கிளைச் செயலாளர் தோழர் இரா கணிகாசலம் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவும்.

நமது பொதுச் செயலாளர் அவர்களின் அறிக்கைக் கிணங்க பம்பாய் ஆமதாபாத் கிளைகள் டிசம்பர் 55-சனவரி 56 ஆகிய இரு திங்களிலும் உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் ஈடுபடவேண்டுவதோடு, இதற்கிடையே எந்தக் கிளையும் தேர்தல் நடத்தக் கூடாது என்பதையும் நினைவிலிறுத்த வேண்டுகின்றேன்.

நமது கழகத்தின் கொள்கை கோட்பாடுகளை, நாம் கோரும் திராவிடம் பிரிய வேண்டியதன் அவசியத்தை வடநாட்டில் வாழுகின்ற பிறமாநிலத்தவர், பிற நாட்டினர் எல்லாம் அறியும் வண்ணம் விளக்குகின்ற மகத்தான பொறுப்பு பம்பாய் தி. மு. கழகத்தைச் சார்ந்ததாகும்

இம் மகத்தான பணியிலீடுபட கிளைக் கழகங்களெல்லாம் அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்த்து, சிறப்புற இயங்க வேண்டும் இதனை ஒவ்வொரு கிளைச் செயலாளர்களும் பொறுப்புள்ள நண்பர்களும் மனதிற் கொண்டு இவ்வாண்டு மேலும் அதிகப்படியான உறுப்பினர்களைச் சேர்த்திடும் பணியிலே ஈடுபட வேண்டுகிறேன். இடையே குறுகிய காலமேயுள்ளமையால் தோழர்களனைவரும் ஆங்காங்கே இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டாக வேண்டும். அனுப்பிக் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தாள் போதாதென்றால் உடனடியாக எனக்குத் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

எஸ். தியாகராசன்
பொதுச் செயலாளர்

முகவரி மாற்றம் :—

க. அறிவழகன் எம். ஏ.,
4. நாடார் காலனி,
தாண்டவராய கிராமணித் தெரு,
தண்டையார்ப் பேட்டை,
சென்னை-21

கைத்தறி
ஆடையையே அணியுங்கள்

மதுரை மாவட்ட தி. மு. கழகம்

●

மதுரை மாவட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் 15—12—55 வியாழன் பிற்பகல் 3-மணிக்கு நிலக்கோட்டையில் மாவட்டச் செயலாளர் எஸ். முத்து அவர்கள் தலைமையிலும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் முன்னிலையிலும் நடந்தது.

திருச்சி பிஷப் கல்லூரி பேராசிரியரும் தி. மு. கழக அனுதாபியுமான இந்தயராஜ் அவர்களின் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு பெருந்தொல்லைகளுக்கு ஆளாகி அவதியுறும் மக்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தும் தமிழகத்தின் தெற்குப் பகுதிகளில் வழங்கும் தேவிகுளம் பீர்மேடு நெய்யாற்றின்கரை, சித்தூர் ஆகிய தமிழ் தாலுக்காக்களையும் தமிழகதின் வடக்கு பகுதிகளில் வழங்கும் திருத்தணி நகரி, புத்தூர், சித்தூர் ஆகிய தமிழ்ப்பகுதிகளையும் தமிழகத்தோடு இணைக்கவேண்டும் என்றும், மதுரை மாவட்டத்தில் ஆங்காங்குள்ள கிளைக்கழகங்கள் உணவு, உடை பொருள் ஆகியவற்றை புயல் நிவாரண நிதியாக திரட்டி மதுரை மாவட்ட கழக நிலையத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின. தோழர். பி. சமதர்மம் அவர்கள் ஏகமனதாக பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் பொதுச்செயலாளர் அவர்கள் கழக ஆக்கவேலை பற்றியும் உறுப்பினர் சேர்க்கும் முறை பற்றியும் அறிவுரையாற்றினர்.

குள்ளம்பட்டி.

15—12—55 வியாழக்கிழமை நடைபெற்ற குள்ளம்பட்டி தி. மு. கழகக் கிளைக் கூட்டத்திற்கு செயலாளர் அய்யண்ணன் அவர்கள் தலைமை வகித்தார்.

தைப்பொங்கல் விழாவை 15-1-56 ஆம் தேதி விமரிசையாகக் கொண்டாடுவது. முன்னாள் செயலாளர் சி. முத்துசாமி அவர்கள் நாளதுவரை கணக்குக் கொடுக்காமலிருப்பதாலும், கூட்டத்திற்கு வராமல் நின்று விடுவதாலும், சுற்றறிக்கைப் புத்தகத்தில் கையொப்பமிட மறுத்ததாலும், இத்தகைய செயலை இக்கழகம் வன்மையாகக் கண்டிப்பதோடு அவர் கழக உறுப்பினராகக் கூட இருப்பதற்கு அருகதையற்றவரெனக் கருதி இன்று முதல் ஐந்து வருடங்களுக்கு அவரை கழகத்திலிருந்து விலக்கி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஐந்து வருடங்களுக்குப் பிறகும் சேர்த்துக் கொள்வதைப் பற்றி ஆலோசிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டதுடன் இதனைமாவட்டக் கமிட்டி மூலமாக மத்திய கமிட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

வணக்கம், டிசம்பர் முடிய பட்டியல் இன்று அனுப்பப்பட்டிருக்கிறது. அதில் கண்டுள்ள விவரப்படி முழு தொகையையும் (மலருக்கான முன் பணத்துடன் சேர்த்து) ஜனவரி 5-ந் தேதிக்குள் தவறாது அனுப்பிவைக்க வேண்டுவதுடன் அவ்விதம் அனுப்பி வைப்பவர்களுக்கு மட்டும்தான் பொங்கல் மலரும் அனுப்பிவைக்க இயலும் என்பதைக் கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தாதாரர்களுக்கு

வணக்கம், ஏற்கனவே அறிவித்திருந்தபடி மலருக்காகத் தனியாக ரூபாய் ஒன்று அனுப்பிவைக்கும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே மலர் அனுப்பிவைக்கப்படும் என்பதை மீண்டும் நினைவூட்டுகிறோம்.

—நிர்வாகி—திராவிடன்

திராவிடன்

சென்னை : 30—12—55 : வெள்ளி

தமிழக அமைச்சர்களுக்கு துணிவு ஏற்படுமா?

●

நேரு சர்க்காரின் எதேச்சாதிகாரப் போக்கினை எதிர்த்துத் தீவிர நடவடிக்கை எடுப்பதில் எல்லா மாநிலக் காங்கிரஸ் தலைவர்களும், அமைச்சர்களும்கூட வரிந்து கட்டி நிற்கின்றனர். ஆனால் தமிழக அமைச்சர்கள்—காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோர் மட்டும் தேசியத்தின் புனிதத் தன்மை. நேரு பண்டிதரின் கீர்த்தி ஆகியவைகளைப்பற்றி தப்பட்டையடித்துக் கொண்டு தமிழகத்தின் உரிமையை விட்டுக் கொடுத்து வருகின்றனர்.

ஆந்திர நாட்டிலுள்ள தமிழ்ப் பகுதிகளைக் குறித்துத் தக்க நடவடிக்கை எடுக்காமல், ஆந்திர மாநில அமைச்சர்களின் சாதாரண அதிர்வேட்டிலேயே திகைத்துத் திரும்பினர் தமிழக அமைச்சர்கள்!

அது போலவே தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின்கரை சித்தூர் பகுதிகள் தமிழகத்துடன் சேரவேண்டும் என்ற பிரச்னையில் திரு—கொச்சி அமைச்சர்கள் எடுத்துள்ள எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு நாலில் ஒரு பங்காவது பதில் நடவடிக்கைகளில் தமிழக அமைச்சர்கள் ஈடுபட்டார்களில்லை. தமிழகத்திலுள்ள மாற்றுக் கட்சிகளின் தொல்லைகளுக்காக வேப்ப எண்ணை சாப்பிடுவது போல அப்பிரச்னையில் முதலமைச்சர் காமராசர் அவர்களும் அவரது சகாக்களும் ஈடுபட்டிருக்கிறார்களேயல்லாது, தமிழகத்தின் தன்மானத்தை நிலைநாட்டும் வகையில் துணிவுகாட்டவில்லை.

இவர்களின் கையாலாகாத் தனமோ அல்லது "பரந்த" நோக்கமோ—ஆக இவர்கள் கூறும் வியாக்கியானமெல்லாம், மொழிவழி மாநில உரிமைக்காக, தேச ஒற்றுமையை சீர்குலையச் செய்யக்கூடாது என்ற உபதேசம்தான்! ஆனால் தேச ஒற்றுமையைப் பற்றி பிற மாநில காங்கிரஸ் அமைச்சர்களுக்கோ அல்லது தலைவர்களுக்கோ யில்லாத அக்கறை தமிழக அமைச்சர் குழுவினரிடம் மட்டும் ததும்பி நிற்பது ஏனோ அறியோம்!

மற்ற மாநில அமைச்சர்களால் தேச ஒற்றுமைக்கு ஊறு நேரிடினும் தமிழக அமைச்சர்கள் மட்டும் அந்த ஒற்றுமையை முட்டுக்கொடுத்து காப்பாற்றுவதில் மகா சூரர்கள் போலும்!

மத்திய சர்க்காரில் அமைச்சராயிருந்த என். வி. காட்கில் அனைத்திந்திய காங்கிரசின் பொதுச் செயலாளராய் பணியாற்றிய சங்கரராவ் தேவ் போன்றவர்கள் எல்லாம் மராட்டிய மண்டலம் அமைக்கப்படவேண்டும் என்பதுடன் அதற்கு பம்பாய் தலை நகராய் இருத்தல் வேண்டும் என்பதில் எந்தத் தேசியத்தையும், ஆசிய ஜோதியின் அபாரப் பெருமையையும் மதித்தார்களில்லை. தங்களின் நாடும் மொழியும் சிதைவுறக் கூடாது என்பதையே தன்மானமாகக் கொண்டுள்ளனர்.

மராட்டிய மண்டல அமைப்புப் பிரச்னையில், காங்கிரஸ் மேலிடத்தாரின் போக்கினை எதிர்த்து நிற்கும் பம்பாய் மாநில மதுவிலக்கு இலாக்கா உதவி அமைச்சர் டாக்டர் டி. ஆர். நாவேணி அவர்கள், பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாயின் தாக்கீதை தகர்த்தெறிந்துவிட்டு தமது பதவியையே ராஜிநாமா செய்திருக்கிறார்.

ஆனால் தமிழகத்தின் அமைச்சா குழுவோ காங்கிரஸ் மேலிடத் ... கட்டளைக்குக் கைகட்டி காத்திருக்கிறது. அனைத்திந்திய, ... ஒற்றுமை என்றெல்லாம் கீரல் விழுந்த இசைத் தட்டுபோல ... அமைச்சர்கள் கூப்பாடு போட்டு வருகின்றனர்! அமைச்சர் ... ன் இந்தப் போக்கு, தமிழகத்திற்கு செய்யும் மகத்தான துரோக ... தும் என்பதை இனியாவது உணர்ந்து, மற்ற மாநிலங்களிலுள்ள ... பகுதிகளைப் பெறும் பிரச்னையில் தன்மானமுடன் செய ... துணிவு கொள்ளுமாறு அறிவுறுத்துகிறோம்.

தோழர். ஆதித்தனுக்கு சிறைவாசம்

மூன்று திங்களுக்குமுன் செங்கற்பட்டு மாவட்டம்—மாத்தூர் விவசாயிகளின் அறப்போரை தலைமை தாங்கி நடத்தியதற்காக 'தினத் தந்தி' ஆசிரியர் ஆதித்தன் அவர்களை அதுசமயம் சர்க்கார் கைது செய்து சில நாட்கள் காவலில் வைத்து விடுதலை செய்தனர்.

பின்னர் மூன்று திங்களாக நீண்ட விசாரணைக்குப்பின் ஆதித்தன் அவர்களுக்கு ரூபாய் 20/—அபராதம் விதித்தனர். எனினும் அபராதத் தொகையைக் கட்டாமல் சிறைத் தண்டனையை ஏற்றுள்ளார் தோழர் ஆதித்தன் அவர்களுக்கும் நமக்கும் கொள்கையில் சில வேறுபாடுகளிருப்பினும் அரசியலாரின் அடக்குமுறையை எதிர்த்து சிறை சென்ற அவரின் ஆர்வத்தைப் பாராட்டுகிறோம்.

●

சென்னையில் தொழிலாளர் கைது

சர்க்காரின் கவலையற்ற போக்கு

'மைசூர் மெட்டல் தொழிற்சாலை—இந்துஸ்தான் ரோலிங் தொழிற்சாலை'யின், ஒரு பிரிவை, சட்ட விரோதமாக, கடந்த மூன்று திங்களுக்கு மேலாக மூடிவைத்து, சுமார் 200 தொழிலாளர்களைப் பட்டினி போட்டு வதைத்து வருவதை எதிர்த்து, வேலை இழந்து தவிக்கும் தொழிலாளர்கள், 27-11-55 அன்று தங்கசாலையில் உள்ள ஆலையின் நிர்வாக அலுவலகத்தின்முன் கூடிப் பட்டினிப்போர் துவங்கினர்,

முதல் பிரிவினராகப் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் 12 பேரை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

தொடர்ந்து தொழிலாளர்கள், அலுவலகத்தின் முன் தினமும் கூடி, பல பிரிவினராகப் பட்டினிப் போருடன் அமைதியாக மறியலும் செய்வர் என்று அந்தத் தொழிலாளர் சங்கச் செயலாளர் அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்,

கடந்த செப்டம்பர் திங்கள் 19-ந் தேதியிலிருந்தே அந்த குஜராத்தி முதலாளி, எந்தவிதமான காரணமும் காட்டாமல் ஆலையை மூடிவிட்டிருக்கிறார்; மேலும், உண்மையிலேயே தொழிற்சாலையை மூடிவிடப்போகிறார்; என்றால், அங்கு பணியாற்றிய தொழிலாளர்களுக்கு சட்டப்படி தரவேண்டிய நஷ்ட ஈட்டையும் தர இந்த முதலாளி மறுத்து வருகிறார்

இந்த தகராறு குறித்துத் தொழிலாளர்கள் சார்பில் தொழிற் சங்கம் பிரதிநிதிகள், சர்க்கார் தொழிலாளர் இலாகாவிடத்தில் முறையிட்டும், சட்டவிரோதமாக நடந்து கொண்டுள்ள முதலாளி மீது நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு வாழ்வுதர இதுவரையில் கையாலாகாதத் தன்மையுடன்தான் காங்கிரஸ் சர்க்கார் இருந்துவந்திருக்கிறது.

பெரியாருக்கு அன்பளிப்பு

24—12—55 அன்று திராவிட இயக்கத் தலைவர் பெரியார் அவர்கட்கு பெரம்பூர் கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில் திராவிடக் கழகத் தோழர்களால், ஒரு 'டாட்ஜ்' பிரச்சார வண்டி அன்பளிப்பாகத் தரப்பட்டது ரூபாய் 23,000 செலவில் தயாரிக்கப்பட்ட அந்த வண்டி, ஒரு சிறு வீடுபோல வசதிகளுடன் அமைந்திருக்கிறது. அன்பளிப்பு விழாவிற்கு ஆயிரக் கணக்கான பொதுமக்கள் வந்திருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக்குழுக் கூட்டம்

29-1-56-ல் சிதம்பரத்தில் நடைபெறும்

—தி. மு. க. தலைமை நிலையம்

புயல் நிவாரணச் சிறப்புக் கூட்டம்

1-1-56 ஞாயிறு மாலை 5-மணிக்கு சென்னை எழும்பூர் டென்னிஸ் ஸ்டேடியத்தில் அறிஞர் அண்ணா, பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், மு கருணாநிதி பேசுவர். பயன் படக்கூடிய துணி ஒன்று தருபவர்மட்டுமே அனுமதிக்கப்படுவர்,

---

வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பக நூல் நிலைய நிதிக்காக

7—1—56 சனி மாலை 6-மணிக்கு

சென்னை சௌந்தர்ய மஹாலில்

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்

தமிழ் இசை இளைஞர் கலா மன்றத்தார் அளிக்கும்

"ஆசைத் தங்கை"

சமூக சீர்திருத்த நாடகம் நடைபெறும். கட்டணம் : ரூ. 5, 3, 2, 1

அடுத்த வாரம்

சுல்தானா ரசியா, கூத்தரசன் மடல், சொற்பொழிவுகளுடன் திராவிடன் 6—1—56 இதழ் வெளிவரும்.

பணம் பாழாகும் படலம்!

ந. சோ. சு.

வெள்ளையர்கள் இந்தியாவை ஆண்டு கொண்டிருந்த காலத்தில், தங்களது ஆதிக்கத்தை எவரும் அசைக்கமுடியாத வகையில் வைஸ்ராய், கவர்னர் போன்ற பதவிகளை உண்டாக்கி வைத்திருந்தனர். இங்கிலாந்து தேசத்தில் இருந்து ஆட்சி செய்துகொண்டு வரும் அரசருக்கோ அல்லது அரசிக்கோ இவர்களெல்லாம் கீழ்ப்படிதலானவர்கள்.

சுதந்திர உணர்ச்சியால் உந்தப்பட்டிருந்த இந்திய மக்கள், எங்கு வீறிட்டெழுந்து கிளர்ச்சி நடத்தி தம்முடைய ஆதிக்கத்தை தகர்த்தெறிந்து விடுவரோ என்ற பயத்தினால் வைஸ்ராய்க்கும், கவர்னர்களுக்கும் அளவுக்கு மீறிய அதிகாரங்களை அளித்து வைத்திருந்தனர், நெருக்கடியான நேரங்களில் நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டால் அதைத் தடுப்பதற்காகவும், சமாளிப்பதற்காவும், கவர்னர்களுக்கு அவசர சட்டங்களைப் பிரயோகிக்கும் உரிமைகளையும், சட்டசபைகளைக் கலைத்து விட்டு தாமே ஆட்சி செய்யும் அதிகாரங்களையும் ஒதுக்கி வைத்திருந்தனர். சுருங்கக் கூறினால் ஒவ்வொரு மாகாண கவர்னரும் பட்டம் பதவிகளுடனும், அதிகார ஆடம்பர ஜபர்தஸ்துகளுடனும், கோலாகல ஆட்சி நடத்தி வந்தனர். கொழுத்த சம்பளமும் பெற்று வந்தனர்.

அந்நிய தேசத்தவரான வெள்ளையர்கள் நம் நாட்டை அடிமைப் படுத்தியிருந்தபோது இந்த நிலையிருந்து வந்தது.

வெள்ளையனே வெளியேறு என்று கோஷம் போட்ட தேசியத்தார் அன்று கவர்னர்கள் கொள்ளைச் சம்பளம் வாங்குவதைக் கண்டித்தனர். கவர்னர்களுக்கு ஏன் இவ்வளவு ஆடம்பரம்? கவர்னர்களுக்கு ஏன் மாடமாளிகை? கவர்னர்களுக்கு ஏன் அத்தனை உரிமைகள்—சலுகைகள் மந்திரிகளுக்கு ஏன் இவ்வளவு கொள்ளைச்சம்பளம் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தால், காங்கிரஸ் சுயராஜ்யம் பெற்றால் கவர்னர் பதவிகளை ஒழித்துக்கட்டி. மந்திரிகளது சம்பளத்தை குறைத்து விடும் என்றெல்லாம் கூப்பாடு போட்டு வந்தனர் தேசியத் தோழர்கள்.

சுயராஜ்யமும் கிடைத்தது. வெள்ளையரும் வெளியேறினர், இந்தியாவும் குடியரசாக மாறியது! சுதந்திரம் வாங்கும்போது கூறிய வாக்குறுதிகளை காங்கிரசார் காற்றிலே பறக்க விட்டனர், காங்கிரஸ் கவர்னர்களுக்கு வெள்ளைக்கார கவர்னர்களுக்கிருந்ததைவிட உரிமைகளும் சலுகைகளும் ஜபர்தஸ்துகளும் தரப்பட்டன வெள்ளைக்கார கவர்னர்களின் ஆடம்பரச் செலவினையும் மிஞ்சுகின்றது காங்கிரஸ் கவர்னர்களின் ஆடம்பரச் செலவு.

வெள்ளையர்களாவது நம்மைச் சுரண்ட வந்த கூட்டத்தினர், ஆகவே அவர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள தங்களது ஏஜெண்டுகளை கவர்னர்கள் என்ற பேரால் மாநிலந்தோறும் அனுப்பி வைத்தனர்.

ஆனால் தற்போது நடைபெறுவதுதான் ஏக இந்தியா ஆட்சியாயிற்றே, ஆள்பவர்களும் இந்தியர்கள்தானே இப்போது ஏன் கவனர் என்ற பதவியும், அவருக்குக் கொள்ளைச் சம்பளமும் என்று கேட்டால் பதவிப் போதை தலைக்கேறிவிட்டவர்கள் சீறி விழுகின்றனர்.

உதாரணமாக சென்னை கவர்னரை எடுத்துக் கொண்டோமானால் அவருக்கு ஆண்டுதோறும் பத்துலட்சம் ரூபாய் சம்பளம் அளிக்கப்படுகிறது; தனிப்பட்ட சம்பளம், விருந்து சம்பளம், வேலைக்காரர் சம்பளம் என்ற பேரால் ஏறக்குறைய பத்து லட்சத்திற்கு மேற்பட்ட ரூபாய்கள் சென்னை சர்க்காரின் கஜானாவில் இருந்து கவர்னருக்குக் கொட்டி யளக்கப்படுகிறது. சென்னை மாநில கவர்னருக்கு மட்டும்தான் இத்தனைக் கொள்ளைச் சம்பளம் என்று கருத வேண்டியதில்லை. எல்லா மாநில கவர்னர்களுக்கும் லட்சக்கணக்கில் சம்பளம் கொடுக்கப்படுகின்றன. இத்தனைக்கும். கவர்னர்கள் செய்து முடிக்கின்ற காரியங்கள், அவர்களுக்கின்ற பொறுப்புகள் பிரமாத மானதல்ல. இன்னும் சொல்லப் போனால் முதலமைச்சர் பதவியைக் காட்டிலும் கவர்னர் பதவி பொறுப்பு வாய்ந்தது மல்ல முக்கியமானது மல்ல.

மிகப்பெரும் பொறுப்பும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான முதலமைச்சருக்கே இரண்டாயிரம் ரூபாய்களுக்கு மேல் சம்பளமில்லை. ஒரு கவலையுமின்றி ராஜ பவனி வருகின்ற கவர்னருக்கு மட்டும் ஏன் பத்து லட்சம் ரூபாய் சம்பளமாகக் கொடுக்கப்படுகின்றது என்று கேட்டால்தான் ஒரு சிலருக்கு கோபம் வருகின்றது.

முதலமைச்சருக் கிருப்பதைப் போல பொறுப்புகளோ கவலைகளோ கவர்னருக்கிருப்பதில்லை என்ற உண்மையை அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்று நிரூபித்துக் காட்டுகிறது.

தஞ்சை—இராமநாதபுரம் மாவட்டங்களில் புயலும் வெள்ளமும் பலத்த சேதத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த காலை. மக்கள் தங்கள் உடமைகளை இழந்து தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் சென்னையின் கவர்னர், மேன்மை தங்கிய ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் வடக்கிலே சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார்!

இங்கிருக்கின்ற அமைச்சர்கள் புயல் வெள்ளக்கொடுமைகளைப் பற்றி வடநாட்டிலிருந்த கவர்னருக்கறிவித்த போதும் கூட மேன்மைதங்கிய கவர்னர் பெருமான், கவலை சிறிதுமின்றி அவகாசத்துடன் வடநாட்டிலேயே சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்,

புயலும்-வெள்ளமும் அடங்கிய பின்னர், முதலமைச்சர் புயல்வெள்ளப் பகுதிகளுக்கு நேரில் சென்று உடனடி நிவாரணம் அளித்த பின்னர், புயல் அடித்து சுமார் பதினேழு நாட்களுக்குப் பின்னர் கவர்னர் தலைநகர் திரும்பினார். தலைநகர் திரும்பிய கவர்னர் உடனேயாகிலும் புயல்-வெள்ளச் சேதப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டு பரிதவிக்கும் மக்களுக்கு ஆறுதல் கூறினாரா யெனின் இல்லை, இங்கிருந்தபடியே மற்ற அமைச்சர்களைக் கேட்டு, சேத விவரங்களைத் தெரிந்து கொண்டு புயல் அடித்தபோது தான் தமிழ் நாட்டில் இல்லாமற் போனமைக்காக வருத்தம் தெரிவித்தார்.

ஆனால் முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களுமோ தங்களாலான உதவிகளையும், ஆறுதலையும் அளித்தனர்.

வழக்கமாக வடநாட்டுத் தலைவர்களுக்கிருக்கும் வரண்ட நெஞ்சு கவர்னருக்கும் இருந்த காரணமோ, அன்றி ஓய்வு ஒழிச்சல் இல்லாத சுற்று பிரயாணத்தினாலோ கவர்னர் புயல் செய்தி யறிந்தும் வடக்கிலேயே இருந்திருக்கிறார். இதைப்பற்றி நாம் இப்போது கவலைப் படத்தேவையில்லை

இத்தகைய அக்கறை சிறிதுமற்ற போக்கும், பொறுப்பற்ற தன்மையும் கொண்ட கவர்னருக்கு ஏன் கொள்ளைச் சம்பளம் லட்சக்கணக்கில் கொடுக்கப்படுகிறது என்ற கேள்வியைத்தான் நாம் கேட்கிறோம்.

இந்தியத்துணைக் கண்டத்தின் குடியரசுத் தலைவர் பதவி மிகப் பெரியதுதான். ஆனால் இந்தியப் பிரதம மந்திரி பதவிக்கு இருக்கின்றதைப் போல பொறுப்பும் முக்கியத்துவமும் குடியரசுத் தலைவருக்குக் கிடையாது. இருப்பினும் குடியரசுத் தலைவருக்கு பெருத்தசம்பளமும் ரதகஜதுரகபதாதிகளின் காவலும், ஆடம்பரமான மாளிகையும், அழகிய மலர்ச் சோலைகளும், ஆள்பலமும் மகாராஜாக்களுக் கிருப்பதைக் காட்டிலும் பெருத்த அளவில் இருக்கின்றன, இவைகளுக்காக ஆண்டுதோறும் மக்களின் வரிப் பணத்திலிருந்து ஏராளமான பொருள் செலவழிக்கப் படுகின்றது,

இந்தியக்குடியரசுத் தலைவர் பதவியையும்- மாகாண கவர்னர் பதவியையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து; இவர்களது படாடோபமும் ஆடம்பரமும் மிகத் தெற்றெனத் தெரிகிறது,

ஆடம்பரங்கள் தேவையில்லை, படாடோபம் வேண்டியதில்லை. ஜபர்தஸ்துகளை விரும்பமாட்டோம். வெள்ளையர்கள் நம் பணத்தைக் கொள்ளையடிக்கின்றனர், சுயராஜ்யம் கிடைத்து நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இந்தக்குறைகளை நீக்குகிறோம் என்று சொல்லிய காங்கிரசார். சுயராஜ்யம் கிடைத்து அது குடியரசாகமாறி ஐந்தாண்டுகள் கழிந்த பின்னரும்கூட, செய்யாதது ஏன் என்று கேட்கிறோம்.

இன்னும் சொல்லப் போனால் பட்டம், பதவிகளில் காங்கிரசாருக்கு விருப்பம் மிக அதிகம்: எப்படி யெனில் வெள்ளையன் இருந்தபோது, ராவ்சாகிப், ராவ்பகதூர், திவான்பகதூர், சர் போன்ற பட்டங்கள், அளிக்கப்பட்டு வந்தன. காங்கிரசார் அன்று அவைகளைக் கண்டித்ததோடு மட்டுமல்ல அப்பட்டத்தை ஏற்றுக் கொண்டிருந்தோரை துரோகிகள், காட்டிக்கொடுக்கும் கயவர்கள்-பதவிவெறி பிடித்தவர்கள் என்றெல்லாம் ஏசியும் பேசியும் வந்தனர்.

ஆனால்தற்போதுகாங்கிரஸ் சர்க்கார் ராவ்சாகிப் திவான் பகதூர் பட்டங்களுக்குப் பதில் பாரதரத்னம், பத்ம விபூஷணம் போன்ற பட்டங்களை அளித்துவருகின்றது. அதே போல கவர்னர்களுக்கும் வெள்ளையன் காலத்தில் இருந்ததை விட கொழுத்த சம்பளத்தையும் கொடுத்து வருகின்றது.

இவற்றையெல்லாம் கண்டித்து நாம் நமது மாநாடுகள் பொதுக் கூட்டங்கள் மூலமாகவும், ஏடுகள் வாயிலாகவும் செய்து வந்த பிரச்சாரம் இன்று அனைவரது கவனத்தையும் ஈர்த்து நிற்கிறது.

கவர்னர் சம்பளத்தைக் குறையுங்கள் என்று நேருவிடம் மகஜர் கொடுக்கச்சென்ற 44 சோஷலிஸ்டுகளை போலீசார் கோவையிலும், பாலக்காட்டிலும், இரவோடு இரவாகக் கைது செய்திருக்கின்றனராம்.

நேருவைச் சந்தித்து தங்களது குறைகளைக் கூற யிருந்தோரை போலீசார் இரவோடு இரவாக மடக்கி வைத்திருந்து நேரு வந்து போனதும் வெளியே விட்டிருக்கின்றனர்.

கவர்னர் பதவி வேண்டுமா வேண்டாமா என்பது வேறு விஷயம். தற்போதைக்கு இந்தியாவில் இருக்கும் பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்குச் சமாளிக்க ஒவ்வொரு கவர்னரின் சம்பளமும் குறைக்கப்பட வேண்டும்—இதற்காக மகஜர் கொடுக்கச் சென்றோரைத் தடுத்து நிறுத்தி யிருக்கின்றனர்.

பல்வேறு துறைகளில் மக்களின் வரிப் பணம் கொள்ளை யடிக்கப்படுவது போ[illegible]

[8-ம் பக்கம் பார்க்க]

டாக்டர். டி. எம். நாயர்

சர். தியாகராயர்

திராவிட சமுதாயத்தைத் தட்டி எழுப்பிய அருந் தலைவர்கள்

காங்கிரசின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு நம் திராவிடத்தில குறிப்பிட்ட ஒரு வகுப்பார் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்திவந்த அவல நிலையை அகற்றவும், எல்லா மக்களும் வாழ வழிவகை செய்யவேண்டும் என்ற கொள்கையை வகுத்தும் 1917-ம் ஆண்டு நீதிக் கட்சியை நிறுவினர். அன்று உத்யோகம் கல்வித்துறைகளில் மட்டுமே முக்கிய கவலை செலுத்தி வந்த நீதிக்கட்சி, பின்னர் திராவிடர் கழகமாகவும், இன்று திராவிட முன்னேற்றக் கழகமாகவும் வளர்ந்து நாட்டுரிமைக்காகப் போராடுகிறது. இந்த நாட்டுப் பிரிவினைப் பிரச்சனையே நேரு பண்டிதரின் ஆதிக்கத்தை நடுங்க வைத்து வருகிறது. எனவே திராவிடத்தின் விடுதலைக்கு 1917-ம் ஆண்டே வித்திட்ட தலைவர்கள் தியாகராயர், டாக்டர். நாயர் ஆகியோரின் தூய்மையான தொண்டு நமக்கு வழிகாட்டியாக அமையுமாக.

பணம் பாழாகும் படலம்—தொடர்ச்சி

தென்று, கவர்னர் சம்பளம் என்ற பேரால் லட்சக் கணக்கான ரூபாய்கள் ஆண்டு தோறும் செலவழிக்கப் படுகின்றது. அதிலும் நம்முடைய சென்னை கவர்னர் சம்பளம் மிக மிக அதிகமானது;

இதைக் குறைக்க வேண்டும் என்று தான் அறிஞர் அண்ணு அவர்கள் சென்னையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அண்ணு அவர்கள் அன்று சொன்ன இக்கருத்தை ஒரு சில தனிப்பட்டவர்களைத் தவிர மற்ற அனைவரும் ஆதரித்தனர், அந்த ஒரு சில தனிப்பட்டவர்களும், திட்டம் குற்றங் குறையுடையது என்ற காரணத்திற்காக எதிர்க்கவில்லை. திட்டம் திடடிக் கொடுத்த அறிஞர் அண்ணு அவர்களின் மீதிருந்த தனிப்பட்ட மனக் கசப்பின் மூலமே குறைகூறி வந்தனர்,

கவர்னரது சம்பளத்தை குறைக்க வேண்டும் என்ற திட்டத்திற்கு அன்றே சிலபல காங்கிரசாரும் ஆதரவு தந்தனர், இன்று சோஷலிஸ்டுகளும் நேருவிடம் மகஜர் கொடுக்கின்றனர்.

கவர்னர்சம்பளம் குறைக்கப்படவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் வேரூன்றி விட்டிருக்கிறது. அந்த எண்ணம் ஒரு பெரிய கிளர்ச்சியாகவோ போராட்டமாகவோ மாறுவதற்குள் அரசினர் தலையிட்டு கவர்னரது சம்பளத்தை குறைத்தால் அவர்களது கண்ணியத்தை நாடு போற்றும்.

நாட்டை அபிவிருத்தி செய்ய நிறைய பணம் தேவை, ஆகவே நாமனைவரும், சிக்கனமுறையை மேற்கொள்ள வேண்டும், என்று போகிற இடங்களிலெல்லாம் ஓயாமல் கூறிவருகின்ற பண்டித நேரு இந்தப்பிரச்னையைக்கவனித்து, கவர்னரது சம்பளத்தை குறைத்தால்தேர்தலுக்குமுன் ஒரு நல்ல காரியத்தையாவது செய்தார் என்ற நற் பெயர் கிடைக்கும்.

மக்கள் கூறுவதும் நியாயம்தான். நமக்கு ஏன் இவ்வளவு கொழுத்த சம்பளம், வேண்டாம் இவ்வளவு பெரிய தொகை, எனக்கூறி கவர்னர்களே தங்களது சம்பளத்தைக் குறைத்துக் கொண்டால் அவர்களது பெருந்தன்மையை நாடு போற்றாமற் போகாது.

காங்கிரசார் சுயராஜ்யம் வாங்குவதற்கு முன் கொடுத்த வாக்குறுதிகளை மறந்தது போகட்டும்! கவர்னர் சம்பளத்தைக் குறைக்கும் பிரச்னையிலாவது தங்களது வாக்குறுதிகளைக் காப்பாற்றத் தவறமாட்டார்கள் என்றே நம்புகிறோம். எந்த முறையிலாவது கவர்னர் சம்பளத்தைக் குறைத்து—அந்தப் பணத்தை மற்ற காரியங்களுக்குப் பயன் படுத்த முனைந்தால் நாடும் மக்களும் நலம் பெறுவர். இதைக் காங்கிரசார் தங்களது ஆட்சிக் காலத்திலேயே செய்ய வேண்டுகிறோம்,

கவர்னர் சம்பளத்தில் இவ்வளவு தாராள மனப்பான்மை காட்டுவதை விட, அல்லற்படும் ஆயிரக்கணக்கான நடுத்தர உத்தியோகஸ்தர்களுக்கு அளிக்கப்படும் சம்பள விஷயத்தில் தங்கள் தாராள மனப்பான்மையைக் காட்டினால் வசதியின்றி குறைந்த சம்பளத்தில் குடும்பம் நடத்தித் தத்தளிக்கும் நடுத்தர உத்தியோகஸ்தர்களின் வாழ்வு உயரும்.

தி. மு கழகத்தின் கவர்னர் சம்பள குறைப்புப் பிரச்னை எல்லா கட்சியினரையும் கவர்ந்து வருகிறது என்பதற்கு சோஷலிஸ்டுகளின் மகஜர் கொடுக்கும் பணி, ஒரு நல்ல அறிகுறி.

ஆளும் கட்சியினர் இதை மனதில் [illegible]த்து உடனடியாக கவர்னரது சம்பளத்தைக் குறைக்க வேண்டுகிறோம்.

மொழிவழி மாநில அமைப்புக்கு பட்டை நாமமா ?

முதல் பக்கத் தொடர்ச்சி

திலும் ஏற்பட்டதில்லையென்றே கூறலாம். அந்த அளவுக்கு அவ்வறிக்கை வீண் வம்பினை விலைக்கு வாங்கியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் மாநில புனா அமைப்புக் குழுவை அமைத்த முறையும், அதனிடம் ஒப்படைக்கப்பட்ட வேலையின் போக்கினையும் எதிர்த்து மக்கள் நாடெங்கும் பலத்த கிளர்ச்சி செய்துவருவதையும் எவரும் மறுப்பதற்கில்லை.

ஆக இப் பிரச்னையை நேர்மையாகவும், ஒழுங்காகவும் தீர்ப்பதற்கான வழிவகைகளில் அக்கறை செலுத்தாமல், மக்களின் விழிப்புணர்ச்சியை வேறு வழியில் திருப்பிவிடும் தந்திரத்தில் நேரு பண்டிதர் இறங்கியிருக்கிறார் !

மாநில புனா அமைப்புக் குழுவின் சிபார்சுப்படி அமையும் மாநிலங்களை (இந்தியா முழுமைக்கும்) தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு, மத்தியம் என்ற பேரால் ஐந்து மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு ஆலோசனைக் குழு ஏற்படுத்தி விட்டால் வடநாடு-தென்னாடு என்ற பேதம் அறவே மறைந்துவிடும் என்று அண்மையில் நேருபண்டிதர் ஒரு வெத்து வேட்டைக் கிளப்பியிருக்கிறார்! பண்டிதரின் இந்த பல்லவியை ஆதரித்து தமிழக கேரள முதலமைச்சர்களும் வடநாட்டிலுள்ள சில தலைவர்களும் சரணம் பாடிவருகின்றனர்!

இவ்விதம் பாடுபவர்களைப் பற்றி நாம் கவலைப்படவில்லை யெனினும் நேருபண்டிதரின் பஞ்ச மண்டல அமைப்பு எந்த லட்சணத்தில் இருக்கு மென்பதையே நாம் திட்டவட்டமாகக் கேட்க வேண்டியிருக்கிறது,

ஐந்துபிரிவுகளாக அமைக்கப்படும்அம்மண்டலங்கள் ஒவ்வொன்றும் முக்கிய பிரச்னைகளிலாகிலும் முழு அரசியல் அதிகாரத்துடன் இயங்குமா? அதுபோலவே அந்தந்த மண்டலத்திற்குட்பட்ட மாநிலங்களின் அரசியல், பொருளாதர பிரச்னைகளை மண்டலக் குழுவின்முலம் தீர்த்துக்கொள்ளும் உரிமையில் இயங்குமா?

பாதுகாப்புப் பிரச்னை யொன்றில் மட்டும் ஐந்து மண்டலங்களிலிருந்து தேர்ந்து எடுக்கப்படும் பிரதிநிதிகள் கொண்ட மத்தியக் குழு பொறுப்பேற்றுக் கொண்டு மற்ற எல்லாவற்றிக்கும் மண்டலக் குழுபொறுப்புடையதாகவும் அதுபோலவே அந்தந்த மண்டலக்குழுவின் ஆலோசனைக்கேற்ப மாநிலக்குழுக்கள் உரிமையுடன் இயங்குமா யென்று கேட்கிறோம்,

இவ்வித அமைப்புப்படி மண்டலக்குழு அமையுமானால் நேரு பண்டிதர் நல்ல எண்ணத்துடனேயே—இந்தியத் துணைக்கண்டத்தின் ஒன்று பட்ட தன்மையையே உயர்யதாக மதித்து, பஞ்சமண்டல அமைப்பைக் கண்டு பிடித்திருக்கிறார் என்று அனைவரும் வரவேற்கச் செய்வர்.

ஆனால் பஞ்ச சீல வீரரின் கண்டு பிடிப்பான மண்டல அமைப்புகள் ஆணும் அல்ல —பெண்ணும் அல்ல; அலி என்ற கதை போலத்தான் இருக்கும் என்பதை தெரிந்தோ தெரியாமலோ அவரின் விளக்கத்திலேயே கொட்டி அளந்திருக்கிறார் !

இந்த அவலட்சணத்தில் அமையும் மண்டலக் குழுவினால் எந்த மாநிலத்துக்குத்தான் பெருமையோ அல்லது பயனோ ஏற்பட முடியும் என்று கேட்கிறோம்.

அதுபோலவே இவ்வித பஞ்ச மண்டலக் குழுக்களினால் வடநாடு — தென்னாடு ஒற்றுமை ஏற்படத்தான் வழி யுண்டா ?

நேரு பண்டிதர் சற்று நாணயத்துடன் இதற்கு பதில் கூற முன் வருவாரா என்று கேட்கிறோம்.

எனவே—ஒவ்வொரு மொழிவழி மக்களின் உணர்ச்சியை மறைக்கவும், அது போலவே இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மக்கள் அந்தந்த இன—கலாச்சார அடிப்படையில் ஒன்று பட்டு வாழ முனைந்துள்ள எழுச்சியை அடக்கவுமே பஞ்ச சீல வீரர் புதிய சர்க்கசைத் துவக்கி யிருக்கிறார்!

ஆனால் சர்க்கசின் ஆட்டமோ மகா மட்டமாயும் அதனை மறைக்க அவர் போடும் கூப்பாடோ சகிக்க முடியாததாயும் இருக்கிறது.

தென்னாட்டு மக்களுக்குக்கிடைக்க வேண்டிய உரிமையைத் தட்டிக்கழிக்க நேரு பண்டிதர் இன்னும் எத்தனை விசித்திரங்கள் புரிவாரோ அறியோம்!

ஆனால் பண்டிதரின் சாகசங்களைக் கண்டு தென்னாட்டு மக்களோ அல்லது அந்தந்த இன கலாச்சாரத்தில் தன்மான எண்ணம் கொண்டிருக்கும் வேறு எவரும் ஏமாந்து விடமாட்டார்கள் என்பதை நேரு பண்டிதர் நினைவில் கொள்ளாமல் காலத்தை வீணாக்கி, பிரச்னையை மேலும் சிக்கலாக்குவது விவேகமற்ற செய்கையாகும் என்பதை அவர் உணரவேண்டுகிறோம்.

நாடெங்கும் தி. மா. மு. கழகக் கிளைகள்

அமைப்பாளர் தரும் விவரம்

●

காரைக்குடி

18—12—55 மாலை 4-மணிஅளவில் தோழர் முத்துராமன் அவர்கள் தலைமையில் தி. மா. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

அதுபோது, நடைபெற்ற தேர்தலில் தோழர்கள் புலியரசன்—செயலாளராகவும், வணங்காமுடி—துணைச் செயலாளராகவும். தேவராசன்—பொருளாளராகவும், சிதம்பரம்—மாவட்ட பிரதிநிதியாகவும் மற்றும் 8-பேர் செயற்குழு உறுப்பினராகவும், தேர்ந்தெடுக்கப் பட்டனர்

உடுமலைப் பேட்டை

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூடி புதிய முறையில் வலிவுடனும், நன்கு செயற்படும் முறையிலும் தேர்தல் நடத்தினர். உறுப்பினர்களாக 25 பேர் சேர்ந்தனர். செயலாளராக பாஸ்கரனும். துணைச் செயலாளராக இளஞ்சேரனும், பொருளாளராக கிருட்டிணனும், துணைப்பொருளாளராக தங்கவேலுவும், விளம்பரச் செயலாளர்களாக கவுஸ் நாச்சி முத்துவும் மாவட்ட பிரதி நிதிகளாக கலைமதி, நெடுஞ்செழியனும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

பெங்களூர்—பெரியார் இராமசாமி நகர்

18—12—55 காலை 10-30 மணிக்கு தோழர் இளஞ்சேரன் தலைமையில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டது. தோழர்கள் பலர் மாணவர் கழகத்தின் குறிக்கோளை விளக்கிப் பேசினர்,

பின்னர், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்—மு. சி. நெடுமாறன், துணைச் செயலாளர்—இ. சந்தர்: பொருளாளர்—மு. சுவாமிநாதன்.

கோலார் தங்கவயல்

21—12—55 மாலை 6-30 மணிக்கு தோழர் துரைராசன் தலைமையில் 25-க்கும் மேற்பட்ட தி. மா. மு. கழக மாணவர்கள் கூடி தேர்தல் நடத்தினர். செயலாளர்—ஜே. இளஞ்செழியன்; துணைச் செயலாளர்— துரைராசன்; பொருளாளர்—தமிழரசன்; செயற்குழு உறுப்பினர்கள் — இளங்கோவன், சந்திரசேகரன், முத்துமாணிக்கம், இராஜாராம், தர்மலிங்கம், சிதம்பரம் ஜெயவீரன்.

ராயப்பேட்டை, சென்னை

25—12—55 காலை 10-மணிக்கு திராவிட மாணவர் முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூடி கிளை ஒன்று அமைத்தனர். கூட்டம் தோழர் சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது:

தோழர் கே. அண்ணுதுரை செயலாளராகவும், தோழர் வே. மு. அன்பரசன் துணைச் செயலாளரககவும், தோழர் இரா. வடிவேலன் பொருளாளராகவும். மற்றும் எழுவர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

டி கே. பொன்னுவேலு அமைப்பாளன்.
தி. மா. மு. கழகம். அறிவகம், சென்னை.

பொன்மலை தி. மு. கழகம்

புயல் நிவாரண நிதிக்கென பொன்மலை மேலக் கற்கண்டார் கோட்டை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பொது மக்களிடம் ரூ. 40-0-0 நன்கொடை வசூலிக்கப்பட்டு சென்னை அரசியலாரின் புயல் நிவாரண நிதி இலாகாவிற்கு மணியார்டர் மூலம் 27—12—55ந் தேதியன்று அனுப்பப்பட்டிருக்கிறது.

...ல் நிவாரணப் பணியில் தி. மு. கழகம்

புயல் நிவாரண நிதி

பம்பாய் தி. மு. க. தீவிரப் பணி

...அண்மையில் திராவிடத்திலேற்பட்ட ...டும் புயலினால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டத்து ...ளின் நிலையை செய்தித் தாள்களின் ...லாகக் காண பம்பாய்—ஆமதா... போன்ற வடநாட்டில் வாழுகின்ற ...ப் பெருங்குடியினர் கொள்ளும் ...ற்ற எல்லையே கிடையாது. ... கடந்த 1952-வது ஆண்டில் ... புயலின் போது நடந்தது போலல்லாது ஓரளவு அர...ரும், குறிப்பாக முதலமைச்சர் ...சரும் விழிப்புடன் பணியாற்றி ...காண சிறிது ஆறுதல் ஏற்படு...து.

பம்பாய், ஆமதாபாத் ஆகிய பகுதிக...ளுள்ள தி மு கழகக் கிளைகள் தாய ...தினரின் துயர் தீர்க்கும் நல்லெண்...த்துடன் பிற அமைப்புகளுடன் கலந்...ம் தனித்தும் சிறப்புற செயல்புரிகிற ...ன்ற செய்தியை மகிழ்வுடன் தெரி...த்துக் கொள்ளுகிறோம்.

தாராவிப் பகுதியிலுள்ள ஜனநாயக ...லிபர் சங்கம், தமிழரசு கழகம், ...யூனிஸ்டுக் கட்சி போன்ற 15 அரசி...-சமுதாய அமைப்புகளுடன் தோழர் ...த. முத்துசாமி அவர்கள் தலைமை...ல் தாராவி தி மு. கழகம் இணைந்து ...யல் புரிந்து வருகிறது.

மாதுங்கா கிளைக் கழகத் தோழர்கள் ...தாழர் என். பெருமாள் அவர்கள் தலைமையில் நிதிக்குழு அமைத்து பணி புரிந்து வருகின்றனர்.

மேலும் பாண்டுப்— காந்திவிலி போன்ற பகுதிகளிலுள்ள கழகக் கிளைகளின் சார்பிலும் புயல் நிவாரண நிதி பிரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஆமதாபாத் நகர தி. மு கழகச் செயலாளர் தோழர் இரா தணிகாசலம் அவர்கள் பிற அமைப்புகளையும் இணைத்து நிதி வசூலுக்கான பணிகளில் ஈடுபட்டிருக்கிறார் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பம்பாய் வாழ் பொதுமக்கள் நிதிக் குழுவினர் வசூலுக்கு வருகின்ற பொழுது உள்ளமுவந்து இயன்றதை ஈந்து தாயகத்தாரின் துயர் துடைப்பதற்கானவை செய்ய மிக்கப் பணிவன்போடு வேண்டிக் கொள்ளுகிறோம்.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தொல்லைக்காளாகியுள்ள ஏழை மக்களுக்கு—கண் துடைப்பிற்காகச் சாரிய மற்றுது அவர் தம் துயர் நீங்கும் வண்ணம் ஆன பணிகளைச் செய்ய அரசியலார் தக்கன செய்திடல் வேண்டும்.

'அந்தந்தப் பகுதிகளிலுள்ள மக்களைக் கொண்டே சீரமைப்புகளுக்கான பணிகளைப் புரிந்திட அரசியலார் முன்வர வேண்டும்'—அது பயன் தரக்கச் சது என்ற கருத்துப்பட தி. மு கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கைப்படி அரசியலார் நடவடிக்கை எடுக்க முற்பட வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறோம், என பம்பாய் தி. மு கழகப் பொதுச் செயலாளர் சார்பில் த. மு. பொற்கோ அறிவிக்கிறார்.

தாராவி கிளையின் வேண்டுகோள்

கடந்த 17, 18-12-55 சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும், தாராவி பகுதி நீங்கலாக மகிம், மாதுங்கா தாதர் ஆகிய பகுதிகளில் ரூ. 260-0-0 உண்டியல் மூலம் வசூலிக்கப்பட்டிருக்கிறது.

பம்பாய் தாராவி பொறுத்த வரையில் பல்வேறு வட்டக் குழுவினர் ஒரே இடத்தில் நிதி வசூல் செய்து அடையும் பலனைவிட, எல்லோரும் ஒன்றாக இணைந்து ஒரு குறிப்பிட்டப் பொதுக் காரியத்தில் குறிப்பாக புயல் நிவாரணம் போன்ற நிதி திரட்டுவதில் அதிக பலன் அடைய முடியும் இக்கூட்டு முயற்சி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல பலனை அளிக்க ஏதுவாகும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு

ஆகவே தாராவி தி. மு. க. உறுப்பினர்களனைவரும், தவறாமல் சர்வகட்சி புயல் நிவாரண நிதி வசூலின் போது பெருவாரியான அளவிலே கலந்து தங்கள் கடமையை நிறைவேற்ற வேண்டுமென செயலாளர் ஆரியசங்காரன் அறிவிக்கிறார்

மாயூரம்

மாயூரம் நகர தி மு. கழக செயற்குழுக்கூட்டம் 11—12—55 ஞாயிறு இரவு 8-மணிக்கு மாயூரம் நியூ போட்டோ ஸ்டுடியோ மாடியில் செயலாளர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது.

அதுபோது புயலால் பாதிக்கப்பட்டோருக்கு அனுதாபம் தெரிவித்தும், புயல் நிவாரணம்பற்றி பொதுச் செயலாளரின் அறிக்கைக்கிணங்க நகர தி. மு கழக சார்பில் துணிகளை நன்கொடையாகப்பெற்று அனுப்பிவைப்பதெனவும் தீர்மானிக்கது.

இராயப்பேட்டை...

தி. மு. கழக சார்பில் ... சனி மாலை 5-மணி முதல் ... வரை புயல் நிவாரண நிதிக்காக ... தோழர்களால் தெருத் தெருவாகச் சென்று வசூல் செய்ததில் ரூபாய் 60/- கிடைத்தது. அதை 21-12-'55 அன்று மாவட்ட குழுவிடம் பொருளாளரால் ஒப்படைக்கப்பட்டது. நிதி உதவிய பொதுமக்களுக்கும் ஆர்வத்தோடு கலந்து கொண்டு ஒத்துழைத்த தோழர்களுக்கும் கழக சார்பில் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கிறேன் என செயலாளர் கோ. இளவரசு அறிவிக்கிறார்.

31-வது வட்ட தி மு. க.

14-12-55 அன்று வட்டத்தின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாகச் சென்று புயல் நிவாரண நிதிக்காக ரூ 127-9-0, அரிசி 37½-படி, 82 துணிகள் வசூல் செய்து இவைகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் செலவு ரூ 4—0—0 போக மீதியனைத்தும் சென்னை மாவட்டக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டது என செயலாளர் வி. இளஞ்சேரலாதன் அறிவிக்கிறார்.

3 வது வட்ட தி மு. க.

18-12-55 ஞாயிறு காலை 8 மணி முதல் கழக உறுப்பினர்கள் செயலாளர் எ. ஜெபகீதம் தலைமையில் ஊர்வலமாக வட்டத்தின் வீடுகளெல்லாம் சென்று புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ உண்டியல் மூலம் நிதி திரட்டினர்கள் பெரும்பாலும் ஏழை தொழிலாளர்களிடமே வசூலிக்கப்பட்ட உண்டியல் தொகை ரூ 51-0-0 சென்னை மாவட்டக் கமிட்டியிடம் 22-12-55 அன்று ஒப்படைக்கப்பட்டது என செயலாளர் அறிவிக்கிறார்.



புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பொதுச் செயலாளர், இரா. நெடுஞ்செழியன் அவர்கள், மதுரை மாவட்டச்செயலாளர். ...எஸ். முத்து, தஞ்சை மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ ஆகியோருடன் சென்று பார்வை யிட்டுள்ளார்.

16

மா. தங்கவேலர்



16—12—55 தொடர்ச்சி

காட்சி 37.

இடம் : ஆற்றோரம்.

நிலைமை; (மூர்த்தி ஆற்றோரத்துக்கு வருகிறான். அவனுக்காகக் காத்திருக்கும் நடனராணி வள்ளி...துள்ளிக்குதித்து ஓடி வருகிறாள் மூர்த்தியிடம்)

வள்ளி: நெடு நேரமாகக் காத்திருந்தேன்...

மூர்த்தி : புறப்படத் தாமதமாகிவிட்டது வள்ளி...

வ : இன்று சிரித்த முகமில்லையே உங்களிடம் ஏனோ?

மூ ; வேகமாக ஓடி வந்தேனே அந்த சோர்வுதான்!

வ : எங்கே இன்று வரமாட்டீர்களோ என்று தான் நினைத்தேன்.

மூ : உன்னைக் காணாத இரவுகள் இனிக்குமா எனக்கு?...சர்க்கரையே!

வ : சர்க்கரையா? அய்யய்யோ கரைந்துவிடுவேனே நான்.

மூ : காலத்தால் அழியாத அமுதக் கலசம் நீ! பொற்கொடியே... விரல் வளைத்து உடல் நெளித்து ஆடும் பாவையே...நீ ஆடப்பிறந்தவள் மட்டுமல்ல என்னை ஆளப் பிறந்தவளுங்கூட...நாட்டிய உலகில் முடிசூடிய மகாராணி... இந்த ஏழைக்கு அந்தப்பெரிய இதயத்தில் இடமுண்டா?

வ : பேச்செல்லாம் தேன்... அது எனக்கு போதை ஏற்றி எங்கோ இழுத்துச் செல்லுகிறது ...கவியரசே! இப்படி அழைத்தால் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே!

மூ : இன்பம் சொல்லிக் கொடுத்த பாடத்தைக் கேட்டுதானே மனிதர்கள் மகா கவிகளாக மாறியிருக்கிறார்கள். உமர் என்ற பாரசீகக்கவிகூட இன்பத்தை அங்கம் அங்கமாக சுவைத்துத்தானே ... 'வெய்யிற்கேற்ற நிழலுண்டு' என்றுபாடினான். வள்ளி! வண்ண மயிலே! உலகஅழகையே தேக்கிக் கொண்டிருக்கிறாய் நீ ... உன்னை சொந்த மாக்கிக் கொண்டதிலே எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?...

வ : ஏன் நிறுத்தி விட்டீர்கள்-பேசுங்கள்!

மூ : நான் பேசிக்கொண்டேயிருந்தால் நீ கேட்டுக் கொண்டேதானிருப்பாய். ஆனால் காலம் ஓடிக்கொண்டே யிருக்கிறதே! அதோ நிலாகூட மேகவிடுதியிலே தங்கி ஓய்வெடுத்துக்கொண்டான் இந்த நல்ல நேரத்தை நாமும் பயன் படுத்திக்கொண்டு......

(இருளாக்கப்பட்டு— சிரிப்பொலி மட்டும் கேட்கிறது)

காட்சி 38 A.

இடம் : வள்ளியின் வீடு.

நிலைமை : (கதிரவன் வெள்ளிக் கதிர்களை வீசத் தயாராகிக் கொண்டிருந்தான்-வள்ளியும் சரிந்த ஆடை களைசரிப்படுத்திக் கொண்டே வீட்டினுள்ளே அடி வைக்கிறாள். உள்ளே கயிற்றுக் கட்டிலிலே அமர்ந் திருக்கும் வீரன் புகைத்துமுடித்த'பீடி'த் துண்டை மூலையிலே வீசிவிட்டு ஆத்திரத்தோடு பார்க்கிறான்)

வீரன் : வள்ளி!...நீ இவ்வளவு மோசமாக நடப்பாயென்று......

வள்ளி ; நினைக்கவில்லை!... அப்படித்தானே-இப்போது புரிந்து விட்டதல்லவா அந்த நினைக்காத நிலைமை!

வீ : இரவெல்லாம் ஆற்றோரத்திலே அந்த ஊதாரியிடம் உனக்கென்ன வேலை ?

வ : அதுவும் புரிந்துவிட்டதா? பின்னர் விளக்குவானேன்! நான் நடனராணி...அவர் ரசிகர்!

வீ: ரசிக சீமான்கள் உனக்காக போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே நீ ஒரு சாதாரண ஆண்டியை நம்பிக்கிடந்தால்...

வ : ஆண்டியும் அரசனும் எனக்கு ஒன்றேதான். நீ புகழும் ரசிக சீமான்கள் எனக்காகத்தானே போட்டி போடுகிறார்கள் ...அந்தப்போட்டி எதற்குஎன்று எனக்குப்புரியும். ஆடவருகிற வளைத் தன் கை பம்பரமாக்க நினைக்கும் அந்த நாச காலர்களிருக்கும்திக்கு நோக்கிக்கூட திரும்பிப்பார்க்க மாட்டேன். நான் சமுதாய சாக்கடையாக மாட்டேன். **விழியிருந்தும் வழி தவறுவேனா?**

கண்ணோட்டம்

சூழ்நிலை காட்டும் மயக்கத்திலே சொக்கித் தம்பாதையை மறந்தோர் ஏராளம் சமுதாயத்திலே...அந்தப் பரிதாபத்திற் குரியவனாகத்தான் மூர்த்தி மாறித் திருகிறான்.

ருதுத்தனத்தை முதலாக வைத்து வாழ்பவர்களும்...காலப் புயலால் நாசக் குகையைக் காலி செய்துவிட்டு நல்ல இதயத்தின் சொந்தக்காரர்களாகி விடுகிறார்கள். வள்ளியும் அப்படிப்பட்டவளாக ஆக்கப்பட்டு விடுகிறாள். துரோக ஊஞ்சலிலே ஆட்டப்படுகிறாள்—கதாநாயகி ராஜப்! அந்த பச்சை மயிலின் வாழ்வுக்காக அன்புத் தோழி கோகிலம் வாதாடுகிறாள். உறவுக்கார பலவேசம் உரிமை பேசினான் அந்த ஊதாரிக்கு...வீரன் துணை யிருந்தான். சாகச நாடகம் உருவாகியது. மோகனம் ஒலித்த இடத்திலே முகாரி ! எண்ணங்களும் சூழ்நிலையும் மோதிக் கொண்டே யிருந்தன. காலமும் கதாபாத்திரங்களை எங்கெங்கோ இழுத்துச் சென்று கொண்டிருந்தது !

எப்போதோ உன் போன்றவர்களின் மயக்கு மொழியால் பாதை மாறியஎண்ணங்கள்...இப்போது திருந்திக்கொண்டன-நீயும் மனிதனாக வாழ நினை...!

வீ : உபதேசமா புரிகிறாய் எனக்கு—அந்த 'அரைப் பட்டினி' போதையைத் தந்து விட்டான் உனக்கு. மாட மாளிகையிலே மணியும், அணியுங்கொஞ்ச வாழ்வதை விட்டு விட்டு கஞ்சிக்கும் கதியற்ற அந்தப் பஞ்சையை நாடியா ஓடுகிறாய்?

வ : அலங்கார வாழ்வு வேண்டாம் அன்பான, அறிவான வாழ்விருந்தால் அதுபோதும் !

வீ : எவ்வளவோ திட்டங்களைப் போட்டிருந்தேன். அவ்வளவையும் ஒரு நொடியிலே தகர்த்து விட்டாயே !

வ : அந்தத் திட்டங்கள்—மகா மட்டமானவை யென்பதை இப்போதாவது புரிந்து கொள்.

வீ : மாங்குடி 'கோடீஸ்வர' முதலி உன்னை நினைத்தே படமெடுக்கத் திட்டமிட்டிருக்கிறார். நீ மட்டும் கொஞ்சம் கருணை வைத்தால் குபேர மேட்டிலே நாம் உலவலாம் வள்ளி! நீ திரையிலே ஜொலிக்கும் நட்சத்திரமாகி விட்டால்...அப்பப்பா...பத்திரிகைகளின் பாராட்டு, ரசிகர்களின் வாழ்த்து...அடடா !

வ : சபலம் ! அது இப்போது எனக்கில்லை! நடன ராணியாக திரையிலே மின்னுவதைவிடஎன் வாழ்வுக் கதாநாயகனின் இதயத்திலே திருவிளக்காக ஒளி பாய்ச்சிகளித்திருப்பதைத்தான் விரும்புகிறேன். படாடோபமும், பகட்டும் பண ஓசையும் இனி என்னை மயக்க முடியாது...?

வீ: கலை அழிவானேன்! திரைத் தாரகையாக மின்னினால் அந்தக் கலை வளர்ந்து விடுமா என்ன? களங்கமிலாத காதலிலே என் கலை வாழ்வு ஓட்டிவிடப் [...]றது! நீ காட்டுகின்ற பாதைய[...] நடந்து என்னையே நான் [...] செய்து கொள்ள மாட்டேன்[...]

வீ : புகழும்—பணமும் [...]லாத வாழ்வி்லே வீசுகின்ற பு[...] உன்னால் தாங்கிக் கொள்[...] முடியாது.

வ : [...] அப்படி கதரு[...] ஆனால். நானே அதை...[...] வாழ்வை வெறுக்கிறேன்.

வீ : நல்லது செய்துவைத்[...] நீயோ நாசத்துக்கு மகுடி [...]கிறாய்...வள்ளி! நான் சொ[...]தைக் கேள் மாங்குடி முதலி[...]னும் சில நாளையிலே இங்கு[...] உன்னையும், ஆட்டத்தைம் க[...] ரசித்து...

வ : படத்திலே கதாநா[...]க்கி விடுவான், பல்லைக்க[...] கொஞ்சிப்பேசு என்று கூறு[...] ...அதுதான் முடியாது-யாரு[...] இந்தக் கதவு திறக்காது!

(கதவை-கோபத்தோடு [...]ரென சாத்துகிறாள் வள்[...] மூடிய கதவைத் திறந்[...] கொண்டு வீரன் வெளியே[...]கிறான்)

காட்சி 38—B

இடம் —பாதையில்...!

வீ . (நடந்து கொண்டே) [...] வேசத்தின் எண்ணங்கள் ரா[...]தை சுற்றியே வட்டமிடுகின்[...] வள்ளியோ புதுக் காதல[...] தேடி ஓடுகிறாள்! இந்த நிலை[...] நமது முயற்சிகள் ? பலவேச[...] 'புதையல்' எங்கே யெ[...] தோண்டிக் கொண்டே யிரு[...]வன். மாங்குடிமுதலியோ பெ[...] மூட்டையைத் தலைக்கு வை[...]ருப்பவன், நன்றாகமுடிவு செ[...] எவ்வளவு தொல்லைக்குப் பி[...] முதலியின் 'தயவை'ப் பெற [...]பாடு செய்தேன். அவ்வளவை[...] மட்டமாக்கி விட்டான். வட்[...]காரி வள்ளி...குப்பை மேட[...] நாய்க்கு பங்களா சுகம் கிடை[...] வேண்டுமே! காதலாம் — க[...]யாம்...சே ! யாருக்கு வேண்[...] இதெல்லாம் !

(அடுத்த வாரம்)

●

திராவிடன் சந்[தா]

விபரம்

ஆண்டு சந்தா	...	ரூ. 8 0
ஆறுமாதம்	...	ரூ. 4 0
தனிப்பிரதி	...	ரூ. 0-[...]

வெளிநாடு

ஆண்டு சந்தா	...	ரூ. 9 0
ஆறு மாதம்	...	ரூ. 4
தனிப்பிரதி	...	ரூ. [...]

தனிப் பாடலிலே ஒரு டோஸ்!

மாயையின் லீலா விநோதங்கள்!

தமிழழகன்

[illegible]வலையால் உந்தப்பட்டு, [illegible]த்து, சோர்ந்து வரும் இளை[illegible]ருக்கு அவளுடைய கூந்தல் [illegible]ளைப்பாறும் விடுதி."

எழுத்தாளன் தீட்டியது

[illegible]யால் வா[illegible], உடல் மெ[illegible] வரும [illegible]ளுக்கு அவளுடைய கண்கள் [illegible]யைப் போக்கிடும் உணவுச் [illegible]."

[illegible]ரு பத்திரிகையின் தலையங்கம்

அவளுடைய பவள செவ் [illegible]மழச் சுவைத்துக் கொண்டே [illegible]தால் தித்திக்கும் தேன் சுனை [illegible] காணலாம்."

—இது ஒரு இளங்கவிஞரின் [illegible]னை.

[illegible]கிப்தின் எழிலரசி கிளியோ[illegible]ராவின் கழுத்திலே காணப் [illegible] முத்துக்கள் அவளுடைய [illegible]ளோ என்று எண்ணு மள[illegible] பிரகாசித்தது."

ஒரு மறத்தமிழனின் கூற்று.

பஞ்சை மிஞ்சிடும் மென்மை [illegible] உடல், இன்பபுரிக்கு [illegible]த்துச் செல்லும் இடை, [illegible]க்கு விருந்தளிக்கும் நடை."

சொற்கள் கட்டுரையாளின் கருத்து.

இமயமலை சாரலிலிருந்து காற் [illegible]ல கலந்துவரும் நோய் நீக்கும் [illegible]ந்தைப்போல, வாலிபர்களின் [illegible] கோளாற்றை நீக்கும் [illegible]ந்துதான் மங்களா"!

இவை வார ஏட்டில் வந்தவை

அவளுடைய கண்கள் ஆயிரம் [illegible] அரங்குகள், அவளுடைய [illegible] நட்சத்திரம் மின்னிடும் [illegible]ளுடைய பேச்சு, தீப்பொறி [illegible]னம். அவளுடைய காலின்சிலம் [illegible]லி மகிழ்ச்சிதரும் இன்னிசை, [illegible]ளுடைய வாழ்க்கைதான் [illegible]"

[illegible]னிமா விளம்பரத்தாளின் உள்ளிருந்தவை.

அவளுடைய வாயொலியில் [illegible]ர்ல் மார்க்ஸின் சித்தாந்தம் [illegible]ண்டோடும். அவளுடைய [illegible]க்கை லெனின் புரட்சியை நினைவுபடுத்தும், அவளின் உள்ள நடத்தை ஸ்டாலின் செயல், அவளுடைய மூச்சு புல்கானின் ஆட்சி"

—ஒரு ஏடு தந்த விளக்கம்

"ஆளைத்தேடிடும் ஆரணங்கு, இரவின் சொந்தக்காரி; இருட்டுக்கோர் இன்பகீதம்! வாலிப உள்ளங்களுக்கோர் வாடாத செம்பக மலர், யாருக்கும் சோராத சரச வல்லி, கடைக்கண்ணின் ஓரத்தில் பல்லிளித்துக்கொண்டு வரும் புன்னகையால் இளைஞர்களைத் தன்னகத்தே இழுப்பவள். பாகு மொழியினால் பார்ப்போரையெல்லாம் பஞ்சணைக்கு அழைப்பவள், அவளை மஞ்சத்தில் கொஞ்சாத நெஞ்சங்களே இல்லை"

—இலக்கிய ஏட்டில் இருந்தவை

"அவள்தான் ஆண்டவனின் மூத்தமகள், காந்தியாருக்குச் செல்லப் பெண், நேருவின் பரிதாபத்திற்குரியவள்"

—செய்தி.

என்று எழுத்தாளர்களும், பத்திரிகை ஆசிரியர்களும், கவிஞர்களும், புலவர்களும், ஏடுகளும், அரசியல் கட்சியினரும் இன்று மங்களா இருந்திருந்தால் மேலே காட்டியவை போல தீட்டி இருப்பார்கள். நல்லவேளை அவள் இப்பொழுது இல்லை!

ஒரு நாட்டின் நாகரீகத்தைத் தெரிவிக்கக் கூடியவை மொழியே யாகும். அதிலேயும் அழகுபட தீட்டப்படும் இலக்கியங்கள் இன்பத்தைக் கொடுக்கும். "மங்கை பொருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக் கீடில்லை" என்று புரட்சிக் கவியின் பேனா முழங்குவதைப்போல தமிழில் படிக்கப் படிக்க இன்பந்தரும் இலக்கியங்களு முண்டு. அவைகளை இன்றையத் தமிழன் படித்தாவது அல்லது கேட்டாவது இன்புற வேண்டும்.

இலக்கியத்தின் இன்பத்தை நுகரத் தொடங்குவோமேயானால் கவலை என்ற தேள், வறுமை என்னும் வல்லூறு, பசி என்ற படமெடுத்தாடும்பாம்பு, தோல்வி எனும் கரையான், நம்மை அணுகாது; நெருங்காது, அதைப் போலவே தனிப் பாடலில் ஒரு பாடல் இன்றைய [illegible] களின் நிலையை அன்றே ஒரு புலவன் அழகாகத் தீட்டியிருக்கிறான்.

இப்பாடலை வைத்துக் கொண்டே கொள்கை விட்டு கொள்கைமாறும் [illegible] களுக்கு உதாரணம் சொல்லலாம். இப்பாடல் இன்றைச் [illegible] நோக்கம் கொண்டவர்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. [illegible] தெரிகிறது. [illegible] வாதிகளின் நிலையை [illegible] கிறது. இப்பாடலைத் தீட்டியது புரட்சிக்கவி [illegible] தாசனா? அல்லது வாணிதாசனா அல்லது கண்ணதாசனா என்று [illegible] விடாதீர்கள் இப்பாடல் [illegible] புலவர் நம் இயக்கத்தவர் அல்லர்.

தமிழ்ச் சொல்லோவியங்களால் வர்ணிக்கத் தகுதி [illegible] 'மங்களா' ஒருநாள் [illegible] கேசரி நாட்டிய [illegible] கொண்டிருக்கிறாள்.

[illegible] மன்னன் தன்னுடைய [illegible] இயற்கையைக் கண்டு [illegible] முறையினைப் பற்றியும் [illegible] பின் திறனைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருக்கையில், திடீரென்று திரும்பினான். மங்களாவைக் கண்டான் மன்னன் அவளுடைய அங்க அமைப்பு ஒவ்வொன்றும் மாற்றானின் மழுங்காக் கூர் வேலின் துனியைவிட அவனுடைய கண்ணைக் [illegible] எதிரியின் படை[illegible] முடிவு கொண்ட[illegible] வளவு வேகம[illegible] அவளது உடல் [illegible] ரசிக்க. இல்லை எவனு[illegible] யாத சிரசைச் சிங்காரி[illegible] யில் படிய வைக்க ஓடினான். [illegible] யிலிருந்து விரைந்து ஓடிவரும் வற்றாத நதியைப் போல ஓடினான்.

மன்னன்தான் ஓடினான்—எப்பொழுதும் அந்தப்புரத்தில் ஆடல் அழகிகளோடு கொஞ்சிப் பழக்கப்பட்ட பரம்பரையில் வந்தவன். ஆனால்.

காயமே பொய்யடா — — காற்றடைத்த [illegible] என்று பாட்டிசைக்கும் [illegible] புரியினரும் போகத்தை [illegible] மோகம் கொண்டு ஓடினார்கள் என்றுக்கல் கூறுகிறார். இப்படிப் பட்[illegible] ஏமாற்றும் [illegible] சன்னியாசிகளை நேரிலே காண்பதைவிட இன்று நாம் ருசிகரமான செய்திகளுடன் நாள் ஏடுகளிலே காணலாம் இந்த கேசரி நாட்டு சன்னியாசிகளின் வழித்தோன்றல்கள் இன்று நம் நாட்டிலும் [illegible] வருகின்றனர்.

[illegible]

[illegible] மங்கை [illegible] என்னி [illegible] ஞானா என்னை [illegible] தேசு செய்பவர்களே [illegible] ஓ [illegible]!! இதோ அந் [illegible] நிறைந்த [illegible] பம். [illegible] மாராசகேசரி நாட்டிய [illegible] கைக் [illegible] வெயில [illegible] யது கண்டு கொற்றவரு[illegible] தொடர்ந்தார். சந்யாசி யோகம் விட்டார் சுத்த சைவரெல்லாம் மடந்தர்னடைத்துச் சிவ ஆசையுங் கட்டி வைத்தனரே!"

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்
மணத்தில் மிகுந்த
செல்வம் ராணி ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்

தயாரிப்பவர்:
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம் ரோடு
தஞ்சாவூர்

உள்ளூர் வாசிகளுக்கும், வெளியூர் பிரயாணிகளுக்கும் சுவை மிகுந்த சிற்றுண்டி—உணவு அளிக்கும் மாளிகை,
பிரபாத் ஓட்டல்
விழுப்புரம்
(ரயில்வே நிலயம் அருகில்)

பொங்கல் வாழ்த்துக்கள்
சென்ற ஆண்டுபோல் முற்றிலும் புதுமை நிறைந்தது
போட்டோவிலேயே வாழ்த்துக்கள்
பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, ஈ. வி. கே. சம்பத், சி. பி. சிற்றரசு, கலைவாணர் N. S. கிருஷ்ணன், நடிகர் S. S. ராஜேந்திரன் இன்னும் பல தலைவர்கள் போட்டோக்களும் கிடைக்கும்
விலை 4 அணா
வியாபாரிகளுக்கு 25 சதவீதம் கழிவு.
ஜி. சிவானந்தம்
புத்தகம்—பத்திரிகை வியாபாரம்
22, பில்டர் பெட் ரோட் : வேலூர் வ. ஆ.

★

...ர்

...த் தலைவர்கள். இந்தியாவில் ...ந்தபோது. குங்குமப் பொட்டு ...ண்டார்களே, அதில் நம்பிக்கை ...அப்படி செய்தார்களா ?

ப : நாடக மேடையில் ராஜபார்ட்டாக நடிக்கும் தோழர், உண்மையிலேயே மன்ன ராகிவிட்டதாக ஆத்தமா-இல்லையே, அது போலவே நாடகம் ஒன்றில் ஒரு நடிசர் பரோபகாரியாகவும், மற்றொருவர் கல்நெஞ் சம் படைத்தவராகவும் நடிப்பதாலேயே இருவரும் அந்தந்த குணங்கள் உடையோர் என்று முடிவுகட்டிவிட முடியுமா? நாடகம் ...ந்தவுடனே அவரவர்களின் இயற்கை ...குணமோ, அல்லது பண்பும்தானே ...ர்களிடத்தில் எதிர்பார்க்கமுடியும்.

அதுபோன்றே—இந்தியத் துணைக்கண் டத்திற்கு வருகை தந்து சென்ற ருஷ்ய நாட்டுத் தலைவர்கள் குங்குமம் இட்டுக் கொண்டது மட்டுமா! கதர் குல்லாயும், கதர் குல்லாய்க்காரர்களின் தத்துவார்த்தத் திற்கு நேர்விரோதமான சரிகைத் தலைப்பா கையையும்தான் அணிந்து கொண்டனர். இதனால் அத்தலைவர்கள் கதர் குல்லாய்க் காரர்களின் தத்துவத்திற்கோ அல்லது சரி கைத் தலைப்பாய் விமர்சனத்திற்கோ அடிமை யாகி விட்டனர் என்று யாராவது கூறமுடி யுமா?

எனவே வெளிப்படையாகச் சொல்ல ...னால், ருஷ்யத் தலைவர்களுக்கு ...ன் சில பகுதிகளில், குங்குமப் ...ம், கதர்குல்லாய், சரிகைத் ...அணிவித்தும் கோணங்கித் ...டுபட்டவர்களின் மனப்பான் ...சரியான ...னர் என் ...ஒன்றும்

...ய, திருச்சி

...நேருஜிக்குப் பிறகு, கோவிந்த ...த் பிரதமராக வருவாரா அல்லது ...ந்தசாய் பிரதமர் ஆவாரா ?

...தோழரே, பந்த்ஜிக்கள்—மொரார் ...மீது தங்களுக்கு அளவு கடந்த ...அபார ஆசை ஏற்படக் காரணம் என் னவோ அறியேன். நேரு பண்டிதர், அனைத் திந்தியப் பிரதமர் என்ற பதவியிலிருந்து கீழ இறங்கிய பிறகு அந்தப் பதவிக்கு அவசியமிருக்குமா என்பதே ஐயப்பாடுடைய பிரச்னையா யிருக்கும்போது, மொரார்ஜிக் களுக்கும் பிரதமர் பதவிக்கும் முடி போடப் புறப்பட்டு விட்டீரே!

ஃ

கே. எஸ். மாதவன், கடலூர்

கே : உங்கள் தி மு. கழகம் இருக்கிறதே ...யல் நிவாரண வேலையில் பாடுபடுவது தேர் ...லில் ஓட்டு வாங்குவதற்கா ?

ப : உலகத்தில் ஆராய்ச்சியாளர்கள் என்னென்ன புதுமையையோ கண்டு பிடிக்கிறார்கள்-அவர்களெல்லாம் உமக்கு நிகர் ஆக முடியுமா? பாருங்களேன் எவ் வளவு கஷ்டப்பட்டு, தி. மு. கழகத்தைக் குறித்து கண்டுபிடித்துவிட்டீர்கள்! அதிருக் கட்டும். பிறருக்கு தீங்குவிளைவித்து, அதன் மூலம் லாபமும் பலனும் பெறுவதைவிட மற்றவர்களுக்கு உதவிசெய்வதின் மூலம் ...துவாக அனைவருக்குமே ஏற்படும் நன்மை ...நதல்லவா. அதனால் உமக்கு ஒன்றும் ...மயில்லையே.

ஃ

...யப்பன், திருவல்லிக்கேணி

... : இந்தியாவை ஐந்து மண்டலங்களாக

★

பிரிக்க வேண்டுமென்று ஜவகர்லால் நேரு சொல்லுகிறாரே—இது எப்படி முடியும் ?

ப : சீன வெடிகளில் வெத்து வேட்டு உண்டல்லவா அதற்கும், நேரு பண்டிதர் கூறும் பஞ்சமண்டல அமைப்புக்கும் வித்தி யாசமிருக்க முடியாது.

ஃ

டி. நெடுஞ்சேரழன், ஆற்காடு

கே : தேவிகுளம் பீர்மேடு மட்டும் தமிழ் நாட்டில் சேர்ந்தால் போதுமென்று நமது மந் திரிகள் டெல்லியில் கேட்டார்களாமே— அப் படியானால் சித்தூர்—நெய்யாற்றங்கரை என்ன ஆவது ?

ப : தோழரே-தேவிகுளம், பீர்மேடு தாலுக்காக்கள் தமிழகத்துடன் சேர வேண்டுமென்று நமது அமைச்சர்கள், நேரு சர்க்காரிடம் வற்புறுத்தியதிலாகிலும் மனப் பூர்வமான எண்ணமோ-நாணயமோ, அவ் விதம் சேர்க்கப்படாவிட்டால் டெல்லி ஆட்சிபீடத்தின் போக்கினை எதிர்க்கும் தன் மானமோ நமது அமைச்சர்களுக்கு இருக்கி றதா என்பதை முதலில் தெரிந்து கொள் ளுங்கள்.

ஃ

கே. மணிமாறன், கோவை

கே : தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சி இப் போது என்ன செய்கிறது ?

ப : தங்களுக்குச் சிறிது கூட சுதந்திர மின்றி வடநாடுத் தலைமைக்கு அஞ்சி, வாய்மூடிக்கொண்டு, நேர்மைக்கு மாறாக நடக்கவேண்டியிருக்கிறதே-தேவிகுளம் பீர் மேடு, சித்தூர், நெய்யாற்றின்கரை ஆகிய பகுதிகள் தமிழகத்தில் சேரவேண்டுமென்ற பிரச்னையில், தமிழகத்திற்குத் துரோகம் செய்யவேண்டிய அநீதிக்கு ஆளாகியிருக்கி றோமே என்று முணுமுணுத்துக் கொண் டிருக்கிறது.

ஃ

எஸ். பக்கிரிசாமி, தஞ்சை

கே : அரசியலே ஒரு சூதாட்டம் என் கிறார்களே இது சரியா ?

ப : அப்படியானால் உலகமே ஒரு சூதாட்டம், அதில்வாழும்மக்கள் சூதாடிகள் என்றுதான் கூறவேண்டி யிருக்கிறது. ஏனெனில் எல்லா ஆசைகளையும் துறந்த தாகக் கூறிக்கொள்ளும் பண்டார சன்னதி கள்கூட அரசியலைப் பற்றிப் பேசும் இந் நாளில், அரசியல் கலப்பில்லாத பிரச்னை ஏதாவது ஒன்று இருக்கிறதா என்பதை நீங் களே சிந்தித்துப் பாருங்கள். அரசியலில் ஏதாவது ஒன்றை எதிர்பார்த்து அதில் தோல்வி கண்டவர்கள் வேண்டுமானால் அர சியல் ஒரு சூதாட்டம் என்று ஓலமிடலாம்.

ஃ

பி. சீனிவாசன், கோவை

கே : அஞ்சா நெஞ்சனே, சோஷலிஸ்ட் கட்சியின் புதிய திட்டங்கள்பற்றி உமது அபிப் பிராயம் என்ன ?

ப: ஏட்டளவில் இருப்பது நடைமுறை யில் வருவதற்குள்ளாக அபிப்ராயம் கூறு வது அறிவுடைமையாகாது. எனவே சற்று பொறுத்திருந்து பாரும்.

ஃ

எம் கேசவன், வேலூர்

கே : பொதுத் தேர்தல் நெருங்கி வருகிறதே தி. மு கழகம் சும்மா யிருக்கிறதே, தேர்தலில் நிற்கப்போவதில்லையா ?

ப : [redacted]ரின் நினைவூட்டுந்தன்மை பாராட்[redacted]ம் மாநில ம... நாட்டிற்குப் பின்னர்தானே பொதுத் தேர் தல் குறித்து யாதொரு நடவடிக்கையும் எடுக்கப்படும்,

ஃ

சி. ஆர் சவுந்தர், நெல்லை

கே : காங்கிரஸ் மேலிடத்தார் என்றும், அதிகாரம் கொண்ட குழு என்றும் முக்கிய சமயங்களில், கமிட்டி அமையும் போதெல் லாம் நேருஜி, ஆசாத், பண்டிட் பந்த் ஆகிய வர்கள் மட்டுமே அங்கம் வகிக்கிறார்களே தென்னாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் ஒரு வருக்குக்கூட இடம் அளிப்பதில்லையே ஏன்?

ப : ''ஏக இந்தியா''வைக் கட்டிக் காப் பதில் வடநாட்டுத் தலைவர்களுக்குத் தானே பாரதமாதா தனி ஆற்றலைத் தந்திருக்கி றாள்! அதனால்தான் மேலிடம் என்றால் எல் லாம், வடநாட்டுத் தேவதைகளே நிறைந் திருக்கும். இதனைத்தான் "அனைத்திந்தியா" என்ற கூப்பாடு போடுவோரின் கடைந் தெடுத்த பித்தலாட்டம் என்று கூறுவது மாகும்.

ஃ

பி நாகவேலு, பெரியமெட்டு

கே : தாழ்த்தப்பட்டவர்களுக்கு என தனி ராஜ்யம் கேட்கப்படுகிறதே அது எந்த ராஜ்யம் என்பதைச் சொல்ல முடியுமா ?

ப : எனக்குத் தெரியாது, சொன்ன வரைக் கேட்டே விவரம் அறிந்து கொள்ள வும். தி. மு. கழகத்தைச்சார்ந்துள்ள நாங் கள் கோரும் திராவிட நாடுதான் திராவி டத்திலுள்ள மற்ற அனைவரை விட சமுதா யத்தில் தாழ்த்தி வைக்கப்பட்டுள்ளவர் களுக்கு அதிக உரிமையுடையதாகும் என் பது மட்டும்தான் எனக்குத் தெரியும்.

ஃ

எம். கண்ணப்பன், சேலம்

கே : மதுரையில் எம். ஆர் ராதா அவர் களின் குழுவினர் நடத்திய ராமாயண நாட கத்தில் கலவரம் செய்தது தவறு என்று மன்னிப்பு எழுதிக் கொடுத்து தெளிவு பெற்ற வர்கள் இனிமேல் அக்காரியங்களில் ஈடு படு வார்களா ?

ப : இது மன்னிப்பு கேட்டவர்களின் மனவளத்தைப் பொறுத்த விஷயமாகும். தவறுக்காக உண்மையிலேயே வருந்தி திருந்துபவர்களும் உண்டு. தொட்டில் பழக் கம் சுடுகாடுமட்டும் என்ற பழமொழிக்குக் காட்சி தருவோரும் நாட்டில் நடமாடுகின் றனர். எனவே மதுரை நாடக சம்பவத்தில் மன்னிப்பு கேட்டுக்கொண்டவர்களின் எதிர் கால நடத்தை எப்படியிருக்குமோ யார் அறிவர்!

ஃ

பி. ராவணன், வடசென்னை

கே : நாங்கள் நடத்தப்போகும் ராமர் சிலை எரிப்பு நடவடிக்கைகளில் உங்கள் தி. மு கழகம் ஈடுபடுமா ?

ப : அய்யா ராவணனே, நாங்கள் என் றால் அதுயார்? ஏதாவது கூட்டுக்கம்பெனி யா, அல்லது பொதுப்பணியாற்றும் நிறு வனமா? முதலில் அதைக்கூறுங்கள். அடுத் தது பிறரின் உழைப்பை எதிர்பார்த்தே ஒரு காரியத்தில் இறங்காதீர்கள்-உங்களால் ஓரளவிலும் முடிவதானால், யோசித்து செயலாற்றுங்கள்,